Koviloor Digital Library

Accno 32246
Q25 3-3

அன்னை

மீனாட்சி அந்தாதி

அரு. சோமசுந்தரன்

Koviloor Digital Library

Koviloor Digital Library

3-3

அன்னை மீனாட்சி அந்தாதி

உரையுடன்

(இதனைத் தினந்தோறும் பாராயணம் செய்தால் வியாதிகள் தீரும்; வறுமை நீங்கும்; துன்பங்கள் விலகும்; எல்லா நலமும் வளரும்)

ஆசிரியர்

(1973ல் மதுரை ஸ்ரீ மீனாட்சி கோவிலில் தமிழக அரசின் முதல் பொற்கிழிப் பரிசினை த் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களிடமிருந்து பெற்ற, 1983ல் இராமேஸ்வரத்தில் இருந்து காசிக்குப் பாதயாத்திரை சென்று வந்த)

''பொற்கிழிக்கவிஞர்'' ''காசிஸ்ரீ''

அரு. சோமசுந்தரன், M.A.B.T. (அருசோ)

பொன்முடி பதிப்பகம்

123, முத்துப்பட்டணம் மூன்றாம் தெரு,

காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் - 630 001.

தொலைபேசி : 04565-38196

LIBRARY KOVILOOR
A. No. 32246

Koviloor Digital Library

பொன்முடி:1
வெளியீடு: 8, நவம்பர், 2000
உரிமை: ஆசிரியர்க்கு

விலை ரூ:10/-

தயாரிப்பு: அருசோ அருணாசலம் என்ற இராமநாதன்

Publishers:
Ponmudi Pathippagam
(Founded on 3.6.1963)
123, Muthupatnam III St,
Karaikudi - 630 001.
Phone : 04565-38196

Copies Available at :
Vetri Book Centre
29, Puthumandapam,
Madurai - 625 001.
Phone : 0452-627839

அச்சிட்டோர் : **சக்தி ப்ராசஸ், போன்: 5950331, 5956006**

Koviloor Digital Library

ஆசிரியர் முன்னுரை..........

சிந்த...க் கவிஞர் சித.சிதம்பரத்தின்
தொலை நோக்குப் பார்வையில் ...
பாரோர் படித்துப் பயனுற வழங்குவோர்
இல்லம் முத்துப்பட்டிணம்,

என்னை ஈன்றெடுத்த தாய் பெயர் மீனாட்சி. மதுரை மீனாட்சியை வணங்கும் போதெல்லாம் என்னைப் பெற்ற அன்னையாகவே நினைத்து வணங்குவேன். மதுரை மீனாட்சியிடம் அப்படி ஒரு ஈடுபாடு எனக்கு. *1957*ல் நான் பி.ஏ. படித்து முடித்ததும் முதலில் ''தமிழ்நாடு'' பத்திரிகையிலும், தொடர்ந்து ''பாங்க் ஆப் மதுரை'' வங்கியின் தலைமை நிலையத்திலும் ஆக மதுரையில் ஓராண்டுக் காலம் பணி புரிந்தேன். அப்பொழுது மதுரை மீனாட்சியைத் தினம் வணங்கும் பேறு பெற்றேன்.

*1973*ஆம் ஆண்டில் தமிழக அரசின் சார்பில் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலார் ''பொற்கிழிக் காவியப் பரிசுப் போட்டி'' அறிவித்த பொழுது அதில் மகிழ்ச்சியோடு பங்குபெற்றேன். மங்கையர்க்கரசியாரின் சரித்திரத்தைப் 'பாண்டிமாதேவி' என்னும் தலைப்பில் காவியமாக எழுதினேன். அப்பொழுது அக்காவியத் தலைவி மங்கையர்க்கரசியாரும், காவியத் தெய்வம் மதுரை மீனாட்சியும் என் தாயின் உருவத்தில் கண் எதிரே காட்சி அளிக்கக் கண்டேன். அதனால் என்னை மறந்து அக்காவியத்தை மூன்றே நாளில் எழுதிப் போட்டிக்கு அனுப்பினேன். அது பொற்கிழி பரிசு பெற்றது மீனாட்சி அருளே! தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களிடம் இருந்து மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் நிகழ்ந்த மாபெரும் விழாவில் பொற்கிழியினைப் பெற்றேன்.

மூல பவுத்திர நோயினால் அடியேன் ஏழரை ஆண்டுகள் அவதிப்பட்டேன். அப்பொழுது எனக்கு ஏழரை நாட்டுச் சனி இரண்டாம் சுற்று ஆட்சிக் காலம்! *17.1.1979* அன்று

Koviloor Digital Library

காரைக்குடியில் உள்ள என் வீட்டில் நிலக்கோட்டைத் தமிழ் மருத்துவர் ஒருவரால் அறுவைச் சிகிச்சை செய்யப் பெற்று (ஊதி எடுக்கும் நாட்டு முறை) படுக்கையில் கிடந்தபொழுது இந்த ''அன்னை மீனாட்சி அந்தாதி' நூலை எழுதினேன். பிறகு இறையருளால் வியாதி தீர்ந்தது. அது பெரிய கதை. இந்த அந்தாதி நூல் மதுரை மீனாட்சியின் பரி பூரண அருளால் எழுதப் பெற்றது. இதனைப் படிப்போர் அனைவர்க்கும் மதுரை மீனாட்சியின் அருள் உண்டு.

நான் எனது 43ஆவது வயதில் இந்நூலை எழுதினேன். இப்பொழுது எனக்கு வயது 65. என் மகன் அருசோ அருணாசலம் என்ற இராமநாதனுடன் மதுரையில் மீனாட்சி அருளால் அவளது புதுமண்டபத்தில் ''வெற்றி புக் சென்டர்' புத்தக நிலையத்தை நடத்தும் நேரத்தில் மகனது முயற்சியினால் இந்நூல் வெளிவருகிறது. இதனை உரையுடன் வெளியிட வேண்டும் என்று பதிப்புச் செம்மல் டாக்டர் ச. மெய்யப்பன் அவர்கள்கேட்டுக் கொண்டார்கள். பாங்க் ஆப் மதுரை வங்கியின் பொது மேலாளர் திரு. கதிரேசன் அவர்களும், அவர்களது தகப்பனார் சுந்தரம் செட்டியார் அவர்களும் இந்நூலைத் தினம் பாராயணம் செய்யும் பாங்கினர். அருமைச் சகோதரர் ச. மெய்யப்பன் அவர்களின் வேண்டுகோளை ஏற்று உரையும் எழுதி இப்பொழுது வெளியிடுகிறேன். நூலாசிரியரே உரை எழுதுவதில்லை; என்றாலும் மதுரை மீனாட்சியின் ஆணை என்று கருதி உரையும் எழுதி வெளியிடுகிறேன். எல்லாரும் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

இதனை வெளியிட முயற்சி மேற்கொண்ட என் மகன் அருசோ அருணாசலத்துக்கும், துணைபுரிந்த மணிவாசகர் பதிப்பக அன்பர் குருமூர்த்திக்கும் என் நல்வாழ்த்துக்கள்.

- அருசோ

மதுரை.
16.10.2000

Koviloor Digital Library

அணிந்துரை

ஓதுவோம் உயர்வோம்

பதிப்புச் செம்மல் டாக்டர் ச. மெய்யப்பன்

தமிழ்நாட்டில் தொல்பழங்காலம் தொட்டுத் தாய் வழிபாடு சிறந்து விளங்குகிறது. மதுரை, காஞ்சி புகழ்பெற்ற சக்தி பீடங்கள். இறை வழிபாட்டில் தமிழ் மக்களுக்கு நீண்ட நெடிய மரபுண்டு. அன்னையிடம் அன்பும் அருளும் வேண்டித் தவம் கிடப்பர் மெய்த் தொண்டர். இறைவன் இறைவி புகழை எப்போதும் நினைந்து காதலாகிக் கசிந்து பாடுவர்.

மனம் ஒன்றி வழிபடுவதற்குத் தவஞானச் செல்வர்கள் இயற்றிய பக்திப்பனுவல்கள் துணை நிற்பன.

நெஞ்சு நெக்குருக நினைந்து நினைந்து வழிபடுவோர் பெறும் பயன்கள் அளவிடற்கரியன. அருளாளர்களின் சொல்லோவியங்கள் வழிபடுவோர் நெஞ்சத்தில் உயிரோவியம் ஆக்குகின்றன. அருட் கவிஞர்கள் இறைவியின் அடிதொடங்கி முடிவரை வருணிப்பது தமிழ் இலக்கிய மரபு. பாராயணம் செய்யும் பக்தர்கள் மனத்தில் அழகுஒழுக இவ் ஓவியங்கள் அமைந்து விடுகின்றன.

இவை மந்திர மொழிகள்.

''அன்னை மீனாட்சி அந்தாதி'', அந்தாதி இலக்கியத்தில் சிறப்பிடம் பெறுகிறது. இதன் ஆசிரியர் ''பொற்கிழிக் கவிஞர்'' அரு. சோமசுந்தரன். இவர் சிறந்த தமிழ்ப்புலவர். முறையாகத் தமிழ் பயின்றவர். பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள் இயற்றியவர். ''அருள் மணியம்'' என்னும் நாடகக் காப்பியத்தை இயற்றியவர். நூறு நூல்களின் ஆசிரியர். பரமன் புகழ்பாடும் பக்தர். பக்திப் பயிர் வளர்க்கும் மெய்யடியார். தூய தொண்டால் உயர்ந்த வன்தொண்டர். வழிபாட்டிற்கு நடைப்பயணத்தை இயக்கம் ஆக்கியவர். இராமேஸ்வரம் முதல் காசிவரை நடைப் பயணம் மேற்கொண்டு வரலாறு படைத்தவர். மீனாட்சி கோவிலில் தமிழக அரசின் பொற்கிழி பரிசு பெற்றவர்.

Koviloor Digital Library

''அன்னை மீனாட்சி அந்தாதி'' என்னும் இந்த நூல் 5 சிறப்புக்களைக் கொண்டது.

1. பக்தி
2. கவிதை வளம்
3. எளிமை
4. அழகிய அந்தாதி அமைப்பு
5. திருமுறைச் செல்வாக்கு

ஆசிரியர் அன்னை மீனாட்சியின் அருளை வேண்டித் தவம் கிடக்கிறார். தான் உய்தி பெறத் தான் பட்ட பாட்டையும், படும் பாட்டையும் கவிதை அழகோடு கூறுகிறார். இவர் வாழ்க்கை அனுபவங்கள் அங்கங்கே பளிச்சிடுகின்றன. பாதயாத்திரை மூலம் பரமனை வழிபடும் நெறியை வலியுறுத்துகிறார். திருமுறையில் ஆழங்கால் பட்டவராதலால் திருமுறைச் சொல்லாக்கம், சொல்லாட்சித் தொடர்கள் இந்த அந்தாதியில் பல இடங்களில் பளிச்சிடுகின்றன. முதல் பாடலின் இறுதிச் சொல்லும், அடுத்த பாடலின் முதல் சொல்லும் இயல்பாக அமைந்து நெட்டுருச் செய்வதற்கு ஏற்ற வகையில் சங்கிலித் தொடர் போல் அமைந்துள்ள திறம் போற்றுதற்குரியது. இந்தப் பக்திப் பனுவலைப் பாராயணம் செய்வதற்கு இவர் பயன்படுத்திய அந்தாதி யாப்பில் முற்றிலும் வெற்றி பெற்றுள்ளார்.

இந்த மாநிலம் பயனுற அன்னை மீனாட்சியிடம் வேண்டும் வரங்கள் பல. நாளும் ஓதுவோர் அதனைப் பெறுவர். அன்னை மீனாட்சியின் அருள் உருவை, அருள் ஆட்சியை இனிய தமிழால் பாடி உயிர் ஓவியம் ஆக்கி உள்ள பொற்கிழிக் கவிஞருக்குப் பொன்றாப் புகழ் தருவது இந்த அந்தாதி. ஓதுவோம், உயர்வோம்.

Koviloor Digital Library

அன்னை மீனாட்சி அந்தாதி

காப்பு

அன்னையே மீனாட்சி அந்தாதி நான்பாட
இம்மையே என்முன் எழுந்தருள்வாய் - கண்ணையே
பாடும் இமைபோலப் பாடுகிறேன் என்தமிழில்
நாடும் நயனத்தைநல்கு.

உரை

தாயே மீனாட்சி! உன்மீது அடியேன் அந்தாதி பாடுகிறேன். இப்பிறவியிலேயே என்முன் காட்சிதந்து அருள்புரிக. கண்ணைப்பாடும் இமைபோலப் பாடுகிறேன். என் கவிதையில் கண்பார் அம்மா!

* * *

ஆரா அமுதே என் அன்னாய்! அருளால் உலகம் ஆட்கொண்டாய்
பேரா யிரம்நீ பெற் றாயே! பிரியம்என்மேல் உற்றாயே!
சீராய்ப் பேணிப் பாலூட்டிச் சிறியே னுக்கும் தமிழ்ஊட்டித்
தேராய் நிற்கும் தாயே நான் தேரில் பொம்மை காப்பாயே! 1

தெவிட்டாத தெள்ளமுதமே! என் தாயே! உன் அருளால் நீ உலகத்தை ஆள்கிறாய்! ஆயிரம் பேர் உனக்கு இருந்தாலும் என்மேல் நீ அன்பு வைத்திருக்கிறாய். சிறியவனாகிய எனக்குப் பாலூட்டித் தமிழ் ஊட்டினாய். நீயோ திருத்தேர்! நானோ அதில் உள்ள ஒரு சிறு பொம்மை! காப்பாயாக.

Koviloor Digital Library

காப்பாய் என்றே பலகாலும் கடைக்கண் அருளால் வளர்கின்றேன்
தோப்பாய் வாழும் உலகத்தில் தொண்டுக் குயில்கள் பரவட்டும்
ஏய்ப்பார் பெருகிப் போனார்கள்; இதயம் கிழித்தே எறிந்தார்கள்
தாய்ப்பால் அருந்தும் உலகத்தைத் தாயே
தினமும் கடைக்கண்பார். 2

நீ காப்பாய் என்று நம்பி வாழ்கிறேன். உன் அருளால் வளர்கிறேன். இந்த உலகம் ஒரு தோப்பு. இதில் தொண்டாற்றும் குயில்கள் போன்றவர்கள் பெருகட்டும். ஆனால் உலகத்தில் ஏய்ப்பவர் பெருகிப் போனார்கள்; இதயத்தைக் கிழித்து எறிந்து விட்டார்கள். தாய்ப்பால் குடிக்கும் குழந்தை போன்ற மக்களைத் தாயே தினமும் கண்பார்த்துக் காப்பாயாக.

✱

பார்த்துச் சலித்தே மறைந்தாயோ? பகடைக் காயாய் உலகத்தைத்
தூர்த்தர் உருட்டும் நிலைகண்டே தூணில் மறைந்தே நின்றாயோ?
வேர்த்துப் பாடும் புலவோர்கள் வெறுத்தே ஓடக் கண்டே நீ
தீர்த்தங் களிலே கலந்தாயோ? தீராப் பொறுமை கொண்டாயோ? 3

தீயவர்களைப் பார்த்துச் சலித்து நீ மறைந்து கொண்டாயா? கயவர்கள் பகடைக் காய் போல இந்த உலகத்தை உருட்டுவதைக் கண்டு தூணில் மறைந்து விட்டாயா? இந்த உலகின் தாழ்நிலை கண்டு வெறுத்துப் புலவர்கள் வியர்த்து ஓடுவதைப் பார்த்துச் சகிக்காமல் நீ தீர்த்தங்களில் மறைந்து கொண்டாயா? அல்லது பெரிய பொறுமை கொண்டாயா?

✱

கொண்டாய் முத்தாம் கணவனையே, கொழுந்தாய்
என்றும் திகழ்கின்றாய்
கண்டன் ஊரைக் கண்டவள்நீ! கன்றாம் உயிர்கள் பயிராக
வண்டாய் புதுவயல் கொண்டவள்நீ!
வைகை மணலில் வாழ்பவள்நீ
பண்டைப் பெருமை உனதென்றே பழஞ்சங் கங்கள் பாடுதம்மா! 4

 Koviloor Digital Library

முத்தான கணவனை நீ பெற்றிருக்கிறாய். குலக்கொழுந்தாய் வாழ்கிறாய். கழுத்திலே கறை உடைய ஈசனின் ஊரைக் கண்டவள் நீ; உன்னுடைய பிள்ளைகளான எல்லாப் பயிர்களும் இனிதுவாழ வண்டுகள் ஆய்கின்ற மலர்கள் மிக்க புதுவயல்கள் உன்னுடையவை. வைகை மணலில் நீ வாழ்கிறாய். பண்டு முதல் பெருமை பெற்றவள் நீ என்று பழைய சங்க நூல்கள் எல்லாம் பாடுகின்றன.

✱

அம்மா தாயே மீனாட்சி! ஆண்டாய் நீயும் பலகாலம்
சும்மா இருந்தே இன்றைக்கும் சுகங்கள் தந்தே காக்கின்றாய்
பெம்மா னுக்குப் பேரில்லை பேசும் சக்தி நீயன் றோ
சும்மா டேந்தும் மண்கூடைச் சொக்கே சற்கும் தொழில்தந்தாய். 5

தாயே மீனாட்சி! நீ பல காலம் ஆண்டு, காலத்தைக் கருதி இப்பொழுது சும்மா இருந்து உன்னைத் தொழும் மக்களுக்கு சுகங்கள் தந்து காக்கின்றாய். உன் சந்நிதியில் சிவத்துக்கு முக்கியத்துவம் இல்லை. நீ தான் சக்தியாக இருக்கிறாய். வந்தியின் பொருட்டு வைகை அடைக்கத் தலையில் சும்மாடும் கூடையும் ஏந்தி வந்த சொக்கேசப் பெருமானுக்கு நீ வேலை தந்தாய்.

✱

தந்தாய் நல்ல பிள்ளைகளை; தமிழுக் கென்றே தந்தாயே
பந்தாய் ஆடும் உலகத்தில் பஞ்சாய் நஞ்சாய்ப் போகாமல்
சிந்தா மணியாய் வாழ்கென்றே செயலுக் குருவம் தந்தாயே!
வந்தா ரெல்லாம் வாழ்த்திடவே வளர்மா மதுரை நின்றாயே! 6

நல்ல பிள்ளைகளை நீ தந்திருக்கிறாய்; அவர்களைத் தமிழுக்காகத் தந்திருக்கிறாய். பந்துபோல் மக்கள் உருளும் இந்த உலகத்தில் உன்பிள்ளைகளாகிய நாங்கள் பஞ்சாகவும் நஞ்சாகவும் கீழ்ப்படாமல், மணிமுடியில் இருக்கும் சிந்தாமணி போல் உயர்ந்து வாழ எங்களது செயல்களைச் சிறப்பித்தாய், வந்தவர்கள் எல்லாம் வாழ்த்த மதுரையில் நீ கோயில் கொண்டாய்.

✱

Koviloor Digital Library

நின்றாய் உன்றன் சந்நிதியில்; நெல்லின் மணிபோல் மானிடர்கள்
குன்றாய் வந்து குவிகின்றார்; கொட்டும் கண்ணீர் பொழிகின்றார்
கன்றாய் நின்று கதறுவதும் கைகள் கூப்பித் தொழுவதுவும்
மன்றில் உன்செவி விழவிலையா? மலரும் உளத்தில்
கனிவிலையா 7

நீ உன் சந்நிதியில் நின்று அருள்புரிகிறாய்; நெல்மணி போல் மனிதர்கள் உன்முன் வந்து மலைபோல் குவிகின்றார்கள். உன்னை வணங்கிக் கண்ணீர் விடுகிறார்கள். கன்றுகள் போல் அவர்கள் உன்முன் கதறுவதும். கைகூப்பித் தொழுவதுவும், உன் செவியில் கேட்கவில்லையா? உன் மனம் கனியவில்லையா?

✱

கனியும் பாலும் கற்கண்டும், கன்னித் தமிழும் மாலைகளும்
தனியாய் மஞ்சள் குங்குமமும் தாளில் வைத்துத் தொழுகின்றார்
பனிபோல் வெள்ளை இதயத்தார் பாடும் பாடல் கேட்கிலையோ?
சனியாம் ஏழரை பீடித்தால் தாயே அரண்செய் உயிர்காத்து. 8

உன்னை வணங்குவோர் பழங்கள், பால், கற்கண்டு, பாமாலை, பூமாலை, மஞ்சள், குங்குமம் முதலியன படைத்துத் தம் குறைகளை உன்னிடம் கூறுகின்றனர். அவர்கள் உள்ளம் வெள்ளைப் பனிபோல் தூய்மையானது. அவர்கள் பாடும் பாடல் உனக்குக் கேட்கவில்லையா? ஏன் அவர்கள் துயரை நீக்கவில்லை? அவர்களுக்கு ஏழரை நாட்டுச் சனியன் பிடித்தால் நீ அவர்களைக் கோட்டை போல் இருந்து காக்க வேண்டும்.

✱

காத்துக் காத்துச் சலித்தாயோ? கடைக்கண் வீச்சை வெறுத்தாயோ?
பார்த்துப் பார்த்துன் சந்நிதியில் பலநா ளாய்த்தவம் கிடந்தோர்கள்
பூத்துப் பூத்துப் போவதுவோ? புன்கண் ணில்ஒளி தாராயோ?
சேர்த்துச் சேர்த்து வைத்ததெலாம் செந்தமிழ் அன்றி வேறிலையே.9

இந்த மக்களை நீ காப்பாற்றிக் காப்பாற்றிச் சலித்து விட்டாயா? ஆகவே கடைக்கண் காட்டவில்லையா? உன்னை வணங்கி, உன் கழல் பார்த்துக் காத்துக் கிடப்போர்கள் கண்கள் பூத்துப் போகலாமா? அவர்களது எளிய கண்ணில் ஒளி தரமாட்டாயா? இந்த உலகத்தில் என்னைப் போன்றவர்கள் சேர்த்து வைத்த சொத்து செந்தமிழ் அல்லவா?

 Koviloor Digital Library

இலையே எமக்கோர் இனித்தெய்வம் எங்கள் தாயே மீனாட்சி
கலையும் நீயே உலகத்தில், கதியும் நீயே எங்கட்கு
சிலையாய் இருந்தே போவா யோ? செந்தமிழ் கேட்க வாராயோ?
தலையே தொழுதோம் வலம்வந்தோம் தாயே எமக்கருள் தாராயோ? 10

இனிமேல் எங்கட்கு வேறொரு தெய்வம் இல்லை. தாயே மீனாட்சி! எங்கட்குக் கலையும் நீதான்! கதியும் நீதான்! உன்னிடம் நாங்கள் எங்கள் குறைகளைச் சொல்லிப் பாடுகிறோம். நீ எங்கள் தமிழைக் கேட்க வரமாட்டாயா? சிலையாகவே இருந்து விடுவாயா? தலை தொழுது பிரகாரம் வந்து வணங்குகிறோம். தாயே! எமக்கு அருள் தரமாட்டாயா?

✱

தாரா திருந்தால் தவிசுண்டோ? தண்டமிழ் பாடத் தடையுண்டோ?
நாராய் இருந்தோர் அனைவர்க்கும் நன்மா மலரே நீயன்றோ
வாரா திருந்தால் வழக்குண்டோ? வற்றாப் புனலே மாமணியே!
சீராய் இருந்தெம் கவிதையிலே சிந்தை குளிர்ந்தே சிரிப்பாயே. 11

நீ அருள் தராவிட்டால் எங்களுக்குப் பெருமை உண்டா? அதற்காக நாங்கள் உன்னைப் பாடத் தடை உண்டா? நாராய் இருப்போர் அனைவர்க்கும் நீதானே மலர்? நீ வாராதிருக்கும் வழக்கம் உண்டா? வற்றாத கங்கைநீ! மாமணி நீ! எமது பாடலில் நீ சீராக இருந்து மனம் குளிர்ந்து சிரிப்பாயாக.

✱

சிரித்துக் கெடுப்பார் பலபேர்கள் தீண்டிக் கெடுப்பார் சிலபேர்கள்
அரித்துக் கெடுப்பார் ஆயிரம்பேர்; அண்டிக் கெடுப்பார் பலகோடி
விரித்துக் கெடுப்பார் சிலநூறு; வெறுத்துக் கெடுப்பார் பலநூறு.
உரித்துக் கெடுப்பார் இங்குண்டோ? உலகத் தாயே உரிப்பாயோ? 12

இந்த உலகத்தில் பலபேர் சிரித்துக் கெடுப்பார்கள்; தொட்டுக் கெடுப்பார்கள்; அரித்துக் கெடுப்பார்கள்; அண்டி (கூட இருந்து) கெடுப்பார்கள்; இருப்பதை விரித்துத் கெடுப்பார்கள்; வெறுத்துக் கெடுப்பார்கள்; ஆனால் தோலை உரித்துக் கெடுப்பவர்கள் உண்டோ? இல்லை. உலகத் தாயாகிய நீ உரித்துக் கெடுப்பாயா?

Koviloor Digital Library

உரித்தால் வாழ வழியுண்டோ? உதிரக் கண்ணீர் வரலாமோ?
கரித்தால் அம்மா போக்குண்டோ?
கடைக்கண் எம்மை நோக்காதோ!
சிரித்தால் தாயே குறையுண்டோ?
சினந்தால் தாயே நிறையுண்டோ?
தரித்தால் உயிரும் உன்னாலே தாயே காப்பாய் மீனாட்சி! 13

அம்மா! நீ உரித்தால் நாங்கள் வாழ வழிஇருக்கிறதா? இரத்தக் கண்ணீர் வரலாமா? நீ கரித்துக் கொட்டினால் எங்களுக்கு வேறு போக்கிடம் உண்டா? நீ கடைக்கண்ணால் பார்க்க மாட்டாயா? நீ சிரித்தால் எங்களுக்குக் குறையில்லை. நீ சினந்தால் எங்களுக்கு நிறையில்லை. எங்கள் உயிர் நிலைத்திருப்பது உன் கையில்! தாயே காப்பாயாக.

✱

மீனாள் என்றே உலகத்தார் மேவிக் கூவித் தொழுகின்றார்
கானாள் வேடர் முன்னேறிக் காளத்தி யானைக் கண்டாலும்
வானாள் தேவர் பூமிக்கே வந்தே நன்மொழி சொன்னாலும்
மேனாள் மூடர் கொள்ளார்கள்; மேலும் உன்முனர் நில்லார்கள். 14

மீனாட்சி! மீனாட்சி! என்று உலக மக்கள் வாயாரக் கூப்பிட்டு உன்னை வணங்குகிறார்கள். காட்டு வேடனாகிய கண்ணப்பன் முன்னேறிக் காளத்தியப்பரைக் கண்டு வணங்கினான். வானத்துத் தேவர்கள் பூமிக்கு வந்து உன்னை வணங்குகிறார்கள். அவர்கள் உன் பெருமையை எடுத்துச் சொன்னாலும் இங்கிருக்கும் மூடர்கள் அதை உணர மாட்டார்கள். உன் சந்நிதிக்கு வந்து உன்னை வணங்க மாட்டார்கள்.

✱

நில்லார் எல்லாம் போனார்கள்; நிலையாய் இருப்பதுன் அருளம்மா!
கல்லார் என்று தள்ளாதே; கதியார் என்று கேளாதே.
பொல்லார் என்று போக்காதே; புரியார் என்று நீக்காதே.
செல்லாக் காசுன் மடியேறும்; செகமே உன்னடி தொழுதேறும். 15

Koviloor Digital Library

உன்னை வணங்காதவர்கள் எல்லாம் அழிந்து போனார்கள். உன் அருள்தான் நிலையானது. உன்னை வணங்க வருபவர்களில் படிக்காதவர்கள் இருக்கலாம்; அவர்களைத் தள்ளிவிடாதே. கதியில்லாதவர்கள் இருக்கலாம்; பொல்லாதவர்கள் இருக்கலாம்; புரியாதவர்கள் இருக்கலாம். அவர்களை எல்லாம் புறக்கணித்து விடாதே. செல்லாத காசு கூட உண்டியல் மூலம் உன் மடியில் ஏறுகிறது. குறையுடைய மக்கள் உன்னை வணங்கி உன் மடியில் ஏறலாம் தானே!

✸

தொழுதே றும் எனில் பழுதுண்டோ?
தோற்றம் மாற்றம் உனக்குண்டோ?
விழுதே றிப்பலன் தந்தவளே! வெற்றிச் சங்கம் கண்டவளே!
அழுதே உன்னைப் பெறலாமே! அம்மா என்றால் வரலாமே!
கழுதே என்றே வைவாயோ? கண்ணே என்றுரை பெய்வாயோ? 16

உலகத்தார் உன்னை வணங்கி உன் மடியில் ஏறலாம் என்ற வாக்குப் பொய்க்குமா? உனக்கு முதலும் இல்லை; மாற்றமும் இல்லை; முடிவும் இல்லை. விழுதுபோல் நீ இருந்து பலன் தருகிறாய். வெற்றி மிக்க தமிழ்ச் சங்கங்களை நீ கண்டவள். அழுதால் உன்னைப் பெறலாம். அம்மா என்று அழைத்தால் நீவருவாய். நீ எங்களைக் கழுதையே என்று வைவாயா? கண்ணே என்று கொஞ்சுவாயா?

✸

பெய்தால் உன்றன் சந்நிதியில் பிணிமூப் போடு வறுமையெலாம்
எய்தா தோடிப் போகாதோ? எங்கள் வாழ்வும் பூக்காதோ?
கைதான் கூப்பும் வேளையிலும், கண்கள் பார்க்கும் காலையிலும்
மெய்தான் விதிர்த்துன் எழில்காண மேவித் தானருள் செய்வாயே.17

நீ அருள் புரிந்தால் நோய், முதுமை, வறுமை எல்லாம் ஓடிப் போகாதோ? எங்கள் வாழ்வு மலராதா? உன்னைக் கண்ணால் காணும் போதும். கைகள் கூப்பி வணங்கும் போதும், எங்கள் மெய்சிலிர்த்து உன் எழிலைக் காண அருள் செய்வாயாக!

Koviloor Digital Library

செய்வாய் என்றே இதுகாறும் சேவித் தோர்கள் பலகோடி
கைவாய்க் கென்றே போராடும் காலம் ஆதலின் உனைச்சற்றுத்
தொய்வாய் விட்டோர் இருந்தாலும்,
தொழிலால் மறந்தோர் இருந்தாலும்
உய்வாய் என்றே கடைக்கண்ணால் ஒருநே ரம்நீ அருளாயோ? 18

நீ அருள் புரிவாய் என்று உன்னை வணங்கியவர்கள் பலகோடிப் பேர். இந்தக் காலமானது கைக்கும் வாய்க்கும் என்று போராடும் நெருக்கடியான காலம். ஆகவே சிலர் உன்னை வணங்குவதில் தொய்வு ஏற்பட்டாலும், சிலர் தொழில் நெருக்கடியால் உன்னை மறந்தாலும், நீ அதுபற்றி நினையாமல் அவர்களும் உய்யக் கடைக்கணித்து அருள்வாய்.

✱

அருளா திருந்தால் உய்வுண்டோ?
அருளிச் செய்தால் நைவுண்டோ?
இருளா யிருக்கும் பாதையிலே, ஏற்றம் போக்கும் போதையிலே
உருளா திருந்தால் உலகத்தார் உண்மை வடிவம் காணாரோ?
சுருளா திருக்கும் பொய்ம்மையெலாம்
சுகமாய் ஆட்டம் போடுவதோ? 19

நீ அருளாவிட்டால் எங்களுக்கு உய்வுண்டா? நீ அருள் செய்தால் எங்களுக்கு அழிவுண்டா? இருட்டான பாதையிலும், வளர்ச்சியை நீக்கும் போதையிலும் இந்த உலகம் செல்லாமல் இருந்தால் உன் உண்மையான வடிவத்தைக் காண்பார்கள். சுருள வேண்டிய பொய்கள் இன்று விரிந்து சுகமாய் ஆட்டம் போடுகின்றன.

✱

போடும் போலி வேடத்தால் புன்மை எங்கும் புகழாக
ஆடும் ஆட்டம் காண்கிலையோ?
அகமே கெட்டால் வாழ்வுண்டோ?
நாடும் பெரியோர் சான்றோர்கள் நலிந்தே போனால் நாடுண்டோ?
காடும் பூக்கச் செய்பவளே! கண்கள் பூக்கச் செயல் நன்றோ? 20

Koviloor Digital Library

இன்று சிலபேர் போடும் போலி வேடத்தால் ஆபாசம் எல்லாம் அழகாக, புன்மை எல்லாம் புகழாக ஆட்டம் போடக் காண்கிறோம். அகம் (உள்ளம்) கெட்டால் வாழ்க்கை உண்டோ? நாம் நாடிச் செல்ல வேண்டிய பெரியோர்கள், சான்றோர்கள் எல்லாம் நலிந்து போனால் நாடிருக்குமா? காடெல்லாம் பூக்கச் செய்யும் நீ கண்கள் பூக்கச் (பூவிழ) செய்யலாமா? நல்லவர்கள் நலியலாமா?

✱

நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ அல்லற் படுவதுவே
கன்றே என்றுன் மடிதாராய்; கண்ணே என்றுன் மார்தாராய்
சென்றே போன காலமெலாம் செயல்ஒன் றின்றிப் போனாலும்
இன்றே கலக்கம் போக்கிடவே எழுந்தே விளக்கம் ஆக்கிடுவாய் 21

தாயே! நீ செய்வது நன்றோ தீமையோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் துன்பப்படுகிறேன். உன் பிள்ளைகளாகிய எங்களுக்கு நீ கன்றே என அழைத்து மடிதரவேண்டும்; கண்ணே என்று அழைத்து (பால்) மார் தரவேண்டும். கடந்த காலத்தில் நாங்கள் செயல் இழந்து இருந்தாலும் எங்கள் கலக்கத்தை இன்றே போக்க எழுச்சிபெறச் செய்து ஒளி ஊட்டுவாய்.

✱

ஆக்கல் காத்தல் அழித்தல்எலாம் அம்மா உன்செயல் ஆனாலும்
நோக்கல் கூடாது என்றிமையை நொடியும் திறவா திருப்பாயோ
தாக்கல் நாற்றிசை வந்தாலும் தடைகள் நாடொறும் தந்தாலும்
காக்கல் உன்இரு கண்அளியே! கனிவும் உன் அரும் தண் அளியே!
22

தாயே! நீ ஆக்குகிறாய், காக்கிறாய்; அழிக்கிறாய். எல்லாம் உன் செயல் என்றாலும் எங்களைக் கடைக்கண்ணால் பார்க்கக் கூடாது என்று இமை மூடி இருக்கிறாயா? எங்களுக்கு நான்கு திசைகளில் இருந்து தாக்குதல்கள் வந்தாலும், தடைகள் வந்தாலும் அவற்றைத் தகர்த்து எங்களைக் காப்பது உன் கருணை அல்லவா? கனிவு காட்டுவது உன் அருள் அல்லவா?

✱

Koviloor Digital Library

தண்ணளியாலே இதுகாறும் தாரணி ஓங்கச் செய்தவளே!
பெண்ணர சாளும் மங்கையரால் பேரர சான பூமியிலே
விண்ணர சோங்கச் செய்தவளே! வியனருள் ஓங்கப் பெய்தவளே!
மண்ணர சோங்கப் புரம்தந்து மாதர சாகிப் பொலிவாயே! 23

உன் கருணையினால் இதுவரை உலகத்தைக் காத்து வளர்த்தாய். இந்த நாட்டைப் பெண்களும் ஆண்டு பேரரசாக இதனை ஆக்கிஇருக்கிறார்கள். இந்த மண்ணரசை விண்ணரசாக ஆக்கியவள் நீ! எங்கும் அருள் பொலியச் செய்தவள் நீ. இந்த மண்ணரசாட்சி நன்கு நடைபெறப் பாதுகாத்து அருள்புரிவாயாக!

✱

பொலிவாய் வலிவாய் உலகத்தில் போற்றும் அறங்கள் பூத்திடவே
தெளிவாய் வான்மொழி தந்திடுவாய்; தேறும் மானுடம் ஆகிடுவாய்
அளிவாய் பாடும் பூமாலை அரன்வாய் பார்த்தே நின்றாலும்
துளிவாய் பாடும் எங்கட்கும் துணிவாய் நாளும் நல்காயே. 24

உலகத்தார் போற்றும் பொலிவான, வலிவான தர்மங்கள் எல்லாம் நன்கு நடைபெற அசரீரிமூலம் ஆசி கூறுக. நீயே மானிட வடிவம் தாங்கி வந்து அருள் புரிக. வண்டுகள் பாடும் பூமாலைகள் சிவனின் வாய் பார்த்து நிற்கின்றன. துளித்துளியாக நாங்கள் பாடி உன் வாய் பார்த்து நிற்கிறோம். எங்கட்குத் துணிவைத் தந்திடுக.

நல்காய் ஆனால் நாயகியே! நாதம் உண்டோ நாவினிலே!
செல்கா தங்கள் பலகோடி; சேவை செய்யத் துறைகோடி
கொல்வார் எங்கும் பலகோடி; கோழை நெஞ்சம் பிறகோடி
வெல்வார் உண்டோ நீ இன்றேல்? வீரம் ஈரம் உனதன்றோ? 25

நீ எங்கட்குத் துணிவைத் தராவிட்டால் தாயே! எங்கள் நாக்கில் ஒலி ஏற்படுமா? நாங்கள் கடந்து செல்ல வேண்டிய தூரம் பல கோடி; சேவை செய்யும் துறைகள் பலகோடி. எங்கும் சூழந்திருக்கிற கொலைகாரர் பலகோடி. மற்ற நெஞ்சங்கள் எல்லாம் கோழைகள். நீ இல்லாவிட்டால் எங்களால் தீய சக்திகளை வெல்ல முடியுமா? வீரமும் கருணையும் உன் கொடை அல்லவா?

Koviloor Digital Library

உனதே ஐம்பெரும் பூதங்கள்; ஒண்ணித் திலமே வாய்திறவாய்
எனதே எனதே என ஏங்கும் ஈனப் பிறவித் துயர்எல்லாம்
மனதே போடும் புள்ளிகளால் மதிகெட் டிடுமோர் கோலங்கள்
தனதே இல்லை என்பார்க்குத் தடையே இல்லை தாயேவா. 26

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்கள் உன்னுடையவை. ஒளிபொருந்திய முத்தே! வாய் திறந்து அருள்புரிக! என்னுடையவை, என்னுடையவை என்று எல்லாப் பொருள்கள் மீதும் ஆசை கொண்டு இந்த உயிர்கள் படும் துயரம் எல்லாம், மனம் போடும் புள்ளிகளால் மதிகெட்ட கோலங்கள் ஆகும். எவையும் என்னுடையவை அல்ல, உன்னுடையவை என்பவர்கட்கு இவ்வுலகில் எந்தத் தடையோ, துயரமோ இல்லை.

✱

தாயே வாவா என்றாலும் தமிழே வாவா என்றாலும்
நாயேன் சொல்லும் பாடலிலே நாதம் உண்டோ என்பாயோ?
சேயேன் என்னிரு கண்ணுக்குள் செந்தா மரையாய் வந்தவளே!
தூயேன் என்சிறு நாவுக்குள் தொல்காப் பியமாய் வந்தவளே! 27

தாயே வருக! தமிழே வருக! என்றெல்லாம் நாயேன் பாடினாலும் அதில் நாதம் இருக்கிறது என்று சொல்வாயா? சேய் (பிள்ளை) ஆகிய என் கண்ணில் செந்தாமரையாக இருப்பவளே! தூயவனாகிய என் சிறுநாவில் தொல்காப்பிய நூலாக விளங்குபவளே!

✱

வந்தவ ளேஎன் வீட்டுக்குள் வளர்பொற் கிழியாய் வாழ்பவளே
கந்தனை என்றன் நயனத்தில் கண்மணி யாகச் செய்தவளே!
வந்தனை கூறிப் பாடுகிறேன் வளர்மலர் தூவித் தேடுகிறேன்
சிந்தனை எல்லாம் உனதன்றோ செயல்எலாம் உன்றன் பரிசன்றோ? 28

என்வீட்டுக்குள் வந்து பொற்கிழியாக (பொன் முடிப்பாக) வாழ்பவளே! முருகனை என் கண்மணியாகச் செய்தவளே! (நீ என் கண்! முருகன் என் கண்மணி) உன்னை வணங்கிப் பாடுகிறேன்; மலர்கள் தூவித் தேடுகிறேன். என் சிந்தனைகள் எல்லாம் நீ தந்தவை. என்னுடைய சாதனைகள் எல்லாம் நீ தந்த பரிசுகள்.

Koviloor Digital Library

பரிசுகள் தந்தாய் பலகோடி பண்புகள் தந்தாய் பலதேடி
வரிசையாய் நோயும் துன்பமெலாம்
வந்திட என்ன தவறிழைத்தோம்?
தரிசனம் தேடி வந்தவர்க்குத் தறிசுகள் நிலமாய்த் தருவதுண்டோ?
பரிசுகள் தந்துன் அருள்மழையைப்
பாரகம் எங்கும் பொழிந்திடுவாய். 29

எனக்குப் பலகோடிப் பரிசுகள் தந்தாய். பல நல்ல பண்புகளைத் தந்தாய். ஆனால் வரிசையாய்ப் பல வியாதிகளும், துன்பங்களும் வர என்ன தவறு செய்தோம்? உன்னைத் தரிசிக்க வந்தவர்களுக்குத் தறிசு நிலத்தைப் பரிசாகத் தரலாமா? நல்ல பரிசுகள் தந்து உன் அருள் மழையை உலகெங்கும் பொழிவாயாக.

✵

பொழிந்திடு வானில் முகில்ஆனாய்;
பூத்திடு கானில் அகில் ஆனாய்
அழிந்திடு விறகில் அக்கினிநீ; ஆடிடும் மேடையில் பொற்கிழிநீ
இழிந்திடும் அருவியில் தீர்த்தம் நீ;
இயல்இசை நாடகம் அனைத்தும் நீ
வழிந்திடு பாலபி ஷேகத்தால்
வையயின் தாயே வணங்குகிறோம். 30

பொழியும் வானத்தில் நீ மேகம்! பூக்கும் காட்டில் நீ மணம்மிக்க அகில்மரம்! எரியும் விறகில் நீ அக்கினி! எழுச்சி தரும் மேடையில் நீ பொற்கிழி! கொட்டும் அருவியில் நீ தீர்த்தம்; மொழிகளில் நீ முத்தமிழ்! வையைக் கரையில் எழுந்தருளி இருக்கும் மீனாட்சித் தாயே! உன்னைப் பாலாபிஷேகம் செய்து வணங்குகிறோம்.

✵

வணங்கிட மனிதப் பிறவியினை வாழ்த்தொலி யோடு தந்தவளே!
சுணங்கிட என்ன காரணமோ? சுகம்தர என்ன தாமதமோ?
அணங்கென உன்னைத் தொழுவதுவும்
அழுதிரு கண்கள் பொழிவதுவும்
குணங்களி கூரப் பாடுவதும் கோபுர மாகக் கொழிதமிழே! 31

Koviloor Digital Library

உன்னை உணர்ந்து வணங்குவதற்கு மனிதப் பிறவியினை வாழ்த்தி எனக்குத் தந்தவனே! எனக்கு நீ அருள்புரிய ஏன் சுணக்கம்? சுகமளிக்க ஏன் தாமதம்? உன்னைத் தெய்வமாகத் தொழுது, கண்களில் நீர்மல்க, உன் குணங்களை மகிழ்ந்து போற்றிக் கோபுரம் போன்ற உயர் தமிழால் பாடுகிறேன்.

✱

கொழிதமி ழாலே பூமாலை கோத்திடு கின்றேன் பாமாலை
வழிபுனல் காவிரி வையையெலாம் வறுமையில்
என்இரு கண்தருமே
ஒழிகெனப் போடும் முழக்கங்கள் ஒண்டமிழ் வானில் இடியன்றோ?
வழிகளைக் காட்டி நடத்திடவே வையயின் தேவி வாராயோ? 32

இனிய தமிழால் உனக்குப் பாமாலையினைப் பூமாலையாகச் சாற்றுகிறேன். காவிரி நீர், வையை நீர் எல்லாம் வறுமைக் காலத்தில் என் கண்களில் இருந்து வந்து விட்டன. (இனி வறுமை வேண்டாம்) ''ஒழிக'' என்ற முழக்கம் தமிழக அரசியல் வானில் இடிபோல் முழங்கக் காண்கிறோம். வழி தெரியாமல் தடுமாறும் மக்களுக்கு நல்வழி காட்டி நடத்தத் தாயே நீ எழுந்துவர மாட்டாயா?

✱

வாரா யோஎன வாடுகிறேன்; வறியேன் பிள்ளைத் தமிழ்கேட்டுத்
தாரா யோஎனத் தாழுகிறேன்; தனியேன் என்றன் தமிழுக்குள்
சேரா யோஎனச் சேவித்தேன்; செகமே உன்றன் வீச்சுக்குள்
நாராய்ப் பூட்டிக் கண்ணசைத்தால்
நாயேன் ஒருநொடி தாங்குவனா? 33

தாயே! நீ வரமாட்டாயா என்று வாடுகிறேன். ஏழையாகிய என்னுடைய பிள்ளைத் தமிழைக் கேட்டு எனக்கு அருள்தர வேண்டும் என்று உன்னைப் பணிகிறேன். தனியவனாகிய என்னுடைய தமிழில் நீ ஐக்கியம் ஆக வேண்டும் என்று வணங்குகிறேன். உலகமே உன்னுடைய கண்வீச்சுக்குள் இருக்கிறது. நீ எதிர்மறையாக என்னை நோக்கிக் கண்ணசைத்தால் என்னால் ஒரு நொடி தாங்க முடியுமா? உன் பேரருள் வீச்சையும் என்னால் தாங்கமுடியுமா?

Koviloor Digital Library

தாங்க எனக்குத் திறமில்லை; தரையில் நிற்கும் உரமில்லை
வாங்கக் கொடுக்கும் கரமில்லை; வாழ்ந்தே போக வரமில்லை
ஓங்கத் தொழிலும் தரமில்லை; உழைத்தே வாழ அறமில்லை.
ஏங்கத் தான்நீ வைப்பாயோ? ஏச்சும் பேச்சும் துய்ப்பாயோ 34

உன் பேரருள் வீச்சைத் தாங்க எனக்குப் பலமில்லை. தரையில் நிலைத்து நிற்க எனக்கு வலிமையில்லை. கொடை கொடுக்க எனக்குச் சக்தி இல்லை. பெருவாழ்வு வாழும் வரமும் இல்லை. ஓங்கி உயரத்தக்க தொழில் வளமும் இல்லை. உழைத்து முன்னேறுதற்கும் உரிய அறம் செய்யவில்லை. கடைசி வரை ஏங்கச் செய்வாயோ? ஏச்சும் பேச்சும் (கேலி) தான் மிச்சமா? அந்த ஏச்சும் பேச்சும் எனக்கில்லை; உனக்குத் தான்.

துய்த்தேன் இத்தனை காலம்நான்;
தொண்டுக் கோடித் துவண்டேனே
பொய்த்தேர் பின்னே போனதிலை
புகழ்த்தேர் என்றே பொங்கவிலை
உய்த்தேன் என்றொரு சொல்லுக்கே
ஊழிக் காலம் உன்னடியில்
கைத்தா ளங்கள் போட்டிடுவேன்;
கனிவாய் ஒரு சொல் சொல்லாயோ? 35

இவ்வளவு காலம் நான் உன் அருள் வீச்சில் இன்புற்றிருந்தேன். தொண்டு செய்ய ஓடி ஓடித் துவண்டு போனேன். இதுவரை நான் பொய்த்தேராகிய மாயாஜாலங்களுக்குப் பின்னே போனதில்லை. புகழ் வந்து விட்டது என்று கர்வம் கொள்ளவில்லை. என்னை உய்வித்தேன் என்று நீ சொல்லும் ஒரு சொல்லுக்கே இதுவரை காத்திருக்கிறேன். அந்தச் சொல்லுக்காகப் பிரளய காலம் வரை உன் காலடியில் காத்துக் கிடப்பேன். தாளங்கள் போடுவேன். அன்பாய் ஒரு சொல் சொல்ல மாட்டாயா?

Koviloor Digital Library

சொல்ஒரு கோடி; பயில்கின்றேன். சுமைஒரு கோடி துயில்கின்றேன்
அல் ஒருகோடி ஆனாலும் அறிவொரு கோடி போனாலும்
கல்ஒரு கோடி கண்டாலும் கடையொரு கோடி நிற்பவனை
வில்ஒரு கோடிப் புருவத்தால் விழிஒரு கோடி தருவாயே. 36

வார்த்தைகள் ஒரு கோடி இருக்கின்றன; இப்பொழுது தான் பேசப் படிக்கிறேன். பாரம் ஒரு கோடி என்னை அழுத்துகிறது; உன்மீது பாரத்தைப் போட்டு நான் தூங்குகிறேன். அல்லாதவை (இரவு) ஒரு கோடி வந்தாலும். அறிவு ஒரு கோடி போனாலும், எதிர்ப்புக்கல் ஒரு கோடி திரண்டாலும். கடைக்கோடியில் தளர்ந்து நிற்கும் என்னை வில்போன்று வளைந்த (கோடி) உன் புருவத்தால். அருள் விழிகாட்டி ஒரு கோடி நலம் தருவாயாக.

Koviloor Digital Library

தருவா யேஎனத் தவிக்கின்றேன்; தழல்வா யேதினம் கண்டஎனை
வெறுவா யோடு போகஎன விடுவா யோஎனப் பொருமுகிறேன்
கருவாய் யோகம் துயின்றமுதல் கடைவாய் யோகம் பயின்றவரை
வருவாய் யோகம் வரைந்தவளே! வரமாய் யோகம் வார்ப்பாயே. 37

நீ எனக்கு அருள்தருவாய் எனத் தவிக்கிறேன். நெருப்பு உமிழும் வாய்களையே தினம் கண்டவன் நான். உன்னிடத்தில் வந்த என்னை வெறுவாயோடு போகச் சொல்லி விடுவாயோ எனக் கலங்குகிறேன். தாயின் வயிற்றில் நான் கருவாய் அடங்கிக் கிடந்து யோகத் துயிலில் இருந்த நாள் முதல், வாய் யோகம் காட்டும் இந்த நாள் வரை வருமான யோகத்தைத் தந்தவளே! நல்ல வரங்களாகிய யோகத்தைத் தருவாயாக.

✱

வார்ப்புகள் எத்தனை எத்தனையோ?
வளர்ப்புகள் எத்தனை எத்தனையோ?
சீர்ப்புகழ் பாடும் தேவாரம் சிந்தைகள் நாடும் வாசகங்கள்
தேர்ப்புகழ் சொல்லித் திரிவதுவோ?
தேன்பிலி மலர்கள் விரிவதுபோல்
ஈர்ப்புகள் இல்லா உலகத்தில் எத்தனை காலம் திரிவதுவே? 38

எத்தனை வார்ப்புகள்? (வடிவங்கள்) எத்தனை வளர்ப்புகள்? உன் புகழைப்பாடுபவை தேவாரம், திருவாசகங்கள். தேரின் புகழினைச் சொல்லமுடியுமா? தேன் பிலிற்றும் மலர்கள் விரிந்து வண்டுகளை ஈர்க்கும், அப்படி ஈர்ப்பு இல்லாத இந்த உலகத்தில் எத்தனை காலம் திரிவது?

✱

திரிந்தது போதும் மலரவிடு; தேர்ந்தது போதும் வளரவிடு.
அறிந்தது போதும் அகலவிடு; அளந்தது போதும் புகலவிடு.
உரிந்தது போதும் உயரவிடு; உடைந்தது போதும் அயரவிடு.
கரிந்தது போதும் கவரவிடு; கழன்றது போதும் சேரவிடு. 39

இந்த உலகத்தில் நான் திரிந்தது போதும். என்னை மலரச் செய். என்னை நீ ஆராய்ந்தது போதும் வளரச் செய். என்னை நீ அறிந்தது போதும் அகலப் படுத்து. என்னை நீ அளந்து பார்த்தது போதும் பேசவிடு. என்னை நீ தோலுரித்தது போதும் உயரச் செய். நான் உடைந்தது போதும் அயரச் செய். நான் கரியாய்ப் போனது போதும் கவர்ச்சி பெறச் செய். நான் கழன்றது போதும் எல்லோருடனும் சேரச் செய்.

Koviloor Digital Library

சேரவே வந்துன் சந்நிதியில் செங்க மலத்தாள் தொழுகின்றோம்
பாரமோ நாங்கள் உன்னடியில் பாவமோ நாங்கள் செய்தறியோம்
சாரமோ இல்லை வாழ்க்கையிலே;
சஞ்சல மோதினம் கொஞ்சமிலை
ஈரமோ நின்னிரு விழிக்கிலையோ?
இதயமோ தண்ணருள் துளிர்க்கலையோ? 40

எல்லோரும் சேர உன் சந்நிதியில் வந்து உன் செந்தாமரைப் பாதங்களைத் தொழுகின்றோம். உன் பாதத்தில் நிற்கும் நாங்கள் உனக்குப் பாரமா? நாங்கள் பாவம் செய்து அறியோம். வாழ்க்கையிலே சத்தும் இல்லை; சாரமும் இல்லை. தினம்தோறும் கவலையோ கொஞ்சம் இல்லை. எங்கள் துயர்கண்டும் உன்விழிகளில் ஈரம் கசியவில்லையா? இதயத்தில் அருள் துளிர்க்கவில்லையா?

✱

துளிர்க்கவே வந்துன் தாள்தொழுதோம் தொண்டருள்
எம்மைக் கூட்டுகண்டாய்
ஒளிக்கவே எண்ணும் உலகமிதில் ஒப்புர வாளர் இருப்பதனால்
களிக்கவே நெஞ்சுக் கிடமுண்டு காத்தருள் இவரைத் தேடியம்மா
விழிக்கவே செய்யும் பாமரரை விருந்தென எண்ணிக் காத்திடுக. 41

உன் அருள் கிடைப்பதற்காக உன் திருவடியை வணங்கினோம். உன்னுடைய அடியாருள் எங்களையும் சேர்த்துக் கொள்க. எதையும் ஒளிக்க நினைக்கும் இந்த உலகத்தில் கொடை செய்வோர் இருப்பதனால் மனம் மகிழ்கிறது. இத்தகைய கொடையாளரைத் தாயே நீ தேடிக் காப்பாயாக. அறியாத பாமர மக்கள் செய்வது அறியாது விழிக்கிறார்கள். அவர்களை விருந்தாக எண்ணிக் காப்பாற்றுக.

✱

காத்திடு தற்குக் கால்நடையாய்க் கையிரு கூப்பிக் கண்சிந்திப்
பார்த்தொரு கோடி நிற்கின்றார்; படித்தொரு கோடி பரவுகிறார்
வேர்த்தொரு கோடி வெதும்புகிறார்; விளக்கொரு கோடி ஏற்றுகிறார்
ஆர்த்தொரு கோடி எதிர்நின்றார்;
அடைத்தொருகோடி போட்டாயே. 42

Koviloor Digital Library

நீ காக்க வேண்டும் என்பதற்காகப் பாதயாத்திரை வந்து, கைகூப்பி, கண்சிந்தி, உன்னைப் பார்த்துக் கோடிக் கணக்கான மக்கள் உன் சந்நிதியில் நிற்கின்றார்கள். உன் புகழைப் படித்து வணங்குவோர் கோடிப்பேர். உன்னை எண்ணி மெய் சிலிர்த்து, வேர்த்து உன் அருளுக்காக வெதும்புவோர் கோடிப்பேர். விளக்கேற்றி வணங்குவோர் கோடிப்பேர். உன்னை எதிர்த்து ஆரவாரித்து நின்றோர் கோடிப்பேர்; அவர்களை நீ ஒரு கோடியில் (மூலையில்) அடைத்துப் போட்டுவிட்டாய்.

✦

போட்டது தாயே ஆனாலும் பொறுமையின் சிகரம் நீயேதான்
கேட்டது தந்து காப்பாய்நீ; கேண்மையில் நல்ல தோப்பாவாய்
பாட்டது கேட்டு நடைபோட்டுப் பச்சிளம் குழந்தை ஆவாய்நீ
வேட்டது தந்து வலம்தந்து வெம்பகை போக்கி வினைதீர்ப்பாய் 43

அடைத்துப் போட்டது நீயே ஆனாலும் நீ பொறுமையின் சிகரம் ஆவாய். உன்னிடம் உன் அடியார்கள் கேட்பதைக் கொடுத்து அவர்களைக் காப்பாய். அன்பில் நீ நல்ல நிழல் தரும் தோப்பு மாதிரி! அடியார்கள் பாடும் பாட்டைக் கேட்டுத் தளிர் நடையிட்டுப் பச்சைக் குழந்தை மாதிரி வருவாய். (குமரகுருபரர்க்குக் குழந்தையாக வந்தாய்). அடியார்கள் விரும்பியதைக் கொடுத்து, அவர்களது கொடிய பகையையும் வினையையும் தீர்ப்பாய்.

✦

வினைகள் தீர்க்க வந்தவளே! வெங்கொடு மைப்பிணி தீர்ப்பவளே!
கணைகள் எத்தனை வந்தாலும் காலன் பத்தடி நின்றாலும்
புணையாய் நின்றெமை உயிர்பேணிப்
புண்ணில் மருந்தாய்க் காத்தவளே!
அணையா உலகில் அன்னாய்நீ ஆதர வின்றேல் என்னாகும்? 44

அடியார்களின் பழவினைகளைத் தீர்ப்பவளே! கொடிய வியாதிகளைப் போக்குபவளே! துன்பங்கள் (அம்புகள்) எத்தனை வந்தாலும், எமன் பத்தடி தூரத்தில் நின்றாலும், எங்களுக்குத் துணையாய், கடலில் படகு போல் நின்று, புண்ணுக்கு மருந்து போல் இருந்து எம் உயிரைக் காப்பவளே! இசையாத இந்த உலகில் தாயே உன் ஆதரவு இல்லாவிட்டால் நாங்கள் என்னாவோம்?

Koviloor Digital Library

என்னா கும்எனில் தெரியாதே, எளிதா கச்சொல முடியாதே
புன்னா கங்கள் மத்தியிலே பூநா கங்கள் படம்காட்ட
இன்னா ரென்றே தெரியாமல், இயல்பொன் றேதும் புரியாமல்
கன்னா பின்னா வாழ்வோர்க்குக் கைகள் நீட்டிக் கரைசேர்ப்பாய். 45

என்னாகும் என்றால் தெரியாது; எளிதாக அதைச் சொல்லவும் முடியாது. பாம்புகள் போன்ற பகைவர்களுக்கு மத்தியில் யார், எப்படி என்று தெரியாமல், பகைவர்களின் இயல்பும் புரியாமல் கன்னா பின்னா என்று பாமரத் தனமாய் வாழும் மக்களுக்குக் கைகொடுத்து நீ காப்பாற்றுவாயாக.

கரைகள் சேர்க்கும் கலங்கரையே! கண்ணீர் விடுவோர் வழிகாட்டி
உரைகள் இல்லை பேச்சில்லை; ஊமை வாயர் என்றாலும்
திரைகள் உள்ளே விழிகாட்டித் தினமும் காக்கும் தேவதையே!
அறைகள் உள்ளே ஆடுகிறோம் அம்பலத் திற்கே அழைப்பாயே. 46

எல்லோரையும் கரைசேர்க்கும் கலங்கரை விளக்கம் நீ! கண்ணீர் விட்டுத் துன்புறுவோர் கடைத்தேற நீ நல்லவழிகாட்டி! பேச்சில்லாத ஊமைகளுக்குக் கூட அவர்களது மனத் திரையில் உன் கண்ணொளி காட்டித் தினமும் காப்பாற்றும் தெய்வம் நீ. அறையில் ஆடும் எங்களை அம்பலத்திற்கு (வெளிமேடைக்கு) அழைப்பாயாக.

அழைப்பாய் என்றே இதுகாறும் அம்மா சேவை செய்தேமைப்
பிழைப்பாய் என்று பாராட்டிப் பிள்ளாய் என்று தாலாட்டி
விளைப்பாய் என்று விரல்காட்டி விருப்பாய் நல்ல மொழிகாட்டித்
தழைப்பாய் என்று தமிழ்காட்டித் தந்தாய் நல்ல பொற்பேழை! 47

நீ எங்களை அழைப்பாய் என்ற நம்பிக்கையில் இதுவரை சேவை செய்த எங்களைப் பிள்ளையே என்று தாலாட்டி, பிழைத்துப் போ என்று பாராட்டி, விளைந்து முன்னேற நல்லவழியினை உன் விரலால் காட்டி, அன்போடு நல்ல வார்த்தைகளைப் பேசி, சிறந்தோங்கத் தமிழ் தந்து, நல்ல தங்கப் பேழையைத் தந்தவளே!

Koviloor Digital Library

பேழைக் குள்ளே மாமணியே! பேணிக் காக்கும் மங்கலமே!
ஏழைக் கிட்ட திரவியமே! இதயத் திற்குள் நவரசமே!
வாழைக் குலமாய்க் காப்பாயே! வற்றாச் செல்வம் வளர்ப்பாயே!
தாழைப் பூவாய் மணப்பாயே! தண்டமிழ் கேட்டுச் சிரிப்பாயே! 48

தங்கப் பேழைக்குள் (பெட்டிக்குள்) இருக்கும் மணியே! எங்களையெல்லாம் பாதுகாக்கும் மங்கலப் பொருளே! ஏழைகளுக்குக் கிடைத்த செல்வமே! இதயத்தை மகிழ்விக்கும் ஒன்பான் சுவையே! எங்கள் குடும்பங்களை வாழையடி வாழையெனக் காப்பாயாக! வற்றாத செல்வங்களை வழங்குவாயே! தாழைப்பூப் போல் மணப்பாயே! எங்களது இனிய தமிழைக் கேட்டு மகிழ்வாயே!

✱

சிரிப்பைக் கேட்கும் வாய்ப்பிலையோ?
சிந்தைக் குள்ளே செல்வம் நீ
உரிப்பாய் என்றே பகைவர்எலாம் உவப்பாய் வந்துன் முன்நின்றார்
குறிப்பாய்ப் பாண்டியர் பாராட்டக் கோபுர மாகி வளர்ந்தவளே!
விரிப்பாய் என்றே ஆணையிடின் வேதம் என்மொழி ஆகாதோ? 49

உன்னுடைய சிரிப்பைக் கேட்கும் சந்தர்ப்பம் எங்கட்குக் கிடையாதா? எங்கள் சிந்தையில் நிறைந்த செல்வம் நீ! எங்களை உரித்து அழிப்பாயாக என்று பகைவர்கள் எல்லாரும் உன்முன் மகிழ்ச்சியோடு வந்து நின்றார்கள். பாண்டிய மன்னர்கள் பணிசெய்யக் கோபுரமாகி வளர்ந்தவள் நீ! 'நீ விரித்துப் பேசுக!' என்று எனக்கு நீ கட்டளையிட்டால் என்னுடைய மொழியாக வேதம் ஆகாதா? (நான் பெரும் புலவன் ஆகமாட்டேனா?)

✱

ஆகா துண்டோ உன்அவையில்? அன்றே பெரும்புகழ் நக்கீரன்
பாகாய் நன்மொழி பாடியதும், பரம்பொருள் அவன்முனர் ஆடியதும்
சாகா வரம்தரு கதையலவோ? சத்தியம் காக்கும் விதையலவோ?
நோகா திருக்கச் செய்தாயே! நோய்நொடி நீக்கி உயிர்காப்பாய். 50

Koviloor Digital Library

உன் பேரவையில் (சந்நிதியில்) ஆகாதது யாது இருக்கிறது? அக்காலத்தில் புகழ்மிக்க நக்கீரன் என்னும் புலவன் பாகுபோல் கவி பாடியதும், சிவபெருமான் அவன் முன்னர் வாதிட்டு நாடகம் ஆடியதும் சாகாவரம் பெற்ற கதை அன்றோ? சத்தியத்தை நிலைநாட்டும் விதை அன்றோ? எங்களைக் கலங்காதிருக்கச் செய்தாய். நோய் நீக்கி எங்கள் உயிரைக் காப்பாயாக.

★

உயிரைக் காக்க வேண்டும்அம்மா?
உன் அருள் தனைஎது தாண்டும் அம்மா!
பயிரைக் காக்கும் முகில் ஆனாய்
பழவினை போக்கும் உயில் ஆனாய்
வெயிலைத் தேக்கும் குடை ஆனாய்;
வெற்றி கொடுக்கும் படை ஆனாய்
துயிலைப் போலொரு சுகம்உண்டோ?
துணிவைப் போலொரு திறம் உண்டோ? 51

தாயே! என் உயிரை நீ காக்க வேண்டும். உன் அருளுக்கு மேல் ஒரு பொருளும் இல்லை. நீ பயிரைக் காக்கும் மேகம்; பழைய வினைகளை நீக்குகிற உயில்; வெயிலை மறைக்கும் குடை; வெற்றியைக் கொடுக்கிற படை. தூக்கத்தைப் போலொரு சுகம் இல்லை; துணிவை (தைரியத்தைப்) போல் ஒரு திறமை இல்லை.

உண்டோ எனஅருள் தேடுகிறோம்; ஓடி ஆடிப் பாடுகிறோம்
கண்டோர் யாரையும் காணவிலை;
கற்றோர் பொருளுரை தேறவிலை
தண்டோ ராக்கள் போடுபவர் தன்னிலை இன்னும் உணரவிலை
விண்டோர் உரைநீ விளம்பாயோ?
வீதி மணலில் கிளம்பாயோ? 52

வேறு ஏதாவது இருக்கிறதா என்று உன் அருளைத் தேடுகிறோம். ஓடி ஆடி உன் அருள்பெறப் பாடுகிறோம். உன்னைக் கண்டவர் யாரையும் நாங்கள் காணவில்லை. படித்தவர்களின் பொருள் நிறைந்த வார்த்தைகளையும் நாங்கள் தெளியவில்லை. தம்மைப் பற்றித் தண்டோராப் போட்டு விளம்பரம் செய்பவர்கள் இன்னும் தம் நிலை பற்றி உணரவில்லை. தெளிவாக ஒரு சொல் நீ சொல்ல மாட்டாயா? தெருமணலில் நீ கிளம்பி வரமாட்டாயா?

Koviloor Digital Library

கிளம்ப வேண்டும் தாயே உன் கீர்த்திப் பாமலர் தூவுகிறோம்
விளம்ப நாவில் தெளிவில்லை; விழியில் பேரருள் துளியில்லை.
அலம்பும் சிந்தனைத் தூளியிலே அம்மா நீஇனும் தூங்குவதோ
புலம்பும் என்மொழி கேளாயோ? புராணம் என்றிதை ஏலாயோ? 53

அம்மா! நீ வீதி மணலில் கிளம்பவேண்டும். உன் புகழ்மாலையினை நாங்கள் பாடுகிறோம். விளம்பரப்படுத்திப் பேச எங்கள் நாக்குக்குத் தெளிவில்லை; எங்கள் விழியில் துளிக்கூட அருள் இல்லை. ஆடும் சிந்தனைத் தொட்டிலிலே அம்மா நீ இன்னும் தூங்கலாமா? புலம்புகிற என் வார்த்தைகளைக் கேட்க மாட்டாயா? புராணம் என்று என் பேச்சினை ஏற்க மாட்டாயா?

★

ஏலா திருந்தால் எளியேனின் இதயம் நிறைவதும் எப்போது?
காலாய் நீவரின் பாலையுண்டோ?
கனலாய் நீவரின் பனியுமுண்டோ
கோலாய் நீவரின் கொடுமை உண்டோ?
கொம்பாய் நீவரின் வெம்பலுண்டோ?
தாலாய் நீவரின் தாழ்வும் உண்டோ?
தாயே! நீ அருள் செய்வதென்றோ? 54

நீ என் கவிதைகளை ஏற்காவிட்டால் அடியேனின் மனம் எப்பொழுது நிறையும்? வாய்க்கால் நீராக நீ வந்தால் நிலம் பாலை ஆகுமா! நெருப்பாய் நீ வந்தால் பனி துன்புறுத்துமா? செங்கோலாய் நீ வந்தால் கொடுமை நிகழுமா? மரக் கொம்பாக நீ வந்தால் காய்கள் பழுக்காமல் வெம்புமா? தாலாட்டாக நீ வந்தால் தாழ்வு ஏற்படுமா? தாயேநீ என்றைக்கு அருள் செய்யப் போகிறாய்?

★

Koviloor Digital Library

என்றோ உன்மொழி செவிகேட்பேன்?
ஏலக் குழலிஉன் நடைபார்ப்பேன்
நன்றோ நீஎமைச் சோதித்தல்?
நகைமுகம் இன்றிச் சாதித்தல்?
குன்றோ எமதுடல் பிணிவைத்தால்?
கொழிகட லோமனம் அலைவைத்தால்
இன்றோர் இடையூறு எமக்குண்டோ?
எல்லாம் உன்செயல் அம்மம்மா! 55

உன்னுடைய அன்பான வார்த்தையை நான் என்றைக்குக் கேட்கப் போகிறேன்? ஏலம் மணக்கும் கூந்தல் உடைய உன் நடையினை நான் என்று பார்ப்பேன்? (நீ எப்பொழுது என்னை நோக்கி நடந்து வரப் போகிறாய்?) நீ எங்களைச் சோதனை செய்வது நல்லதா? சிரித்த முகம் காட்டாது சாதிப்பதுநல்லதா? நீ எங்கள்உடலில் தீராத வியாதியை வைத்தால் அதனைத் தாங்குவதற்கு எங்கள் உடல் என்ன மலையா? மனத்தை அலைபாய வைத்தால் எங்கள் மனம் என்ன கடலா? உன் அருள் இருந்தால் எங்கட்குத் துன்பம் உண்டா? எல்லாம் உன் செயல் அம்மா!

அம்மம் மாஎன அழுகின்றோம்; அருவிக் கண்ணீர் பொழிகின்றோம்
தும்மல் இருமல் வரும்போதும் தொழில்கள் செய்தே எழும்போதும்
செம்மல் எனப்பிறர் சொலும்போதும்,
சேவைக் கென்றே செலும் போதும்
அம்மா உனைத்தான் அழைக்கின்றோம் அறியா திருப்பதா உன்நீதி!
56

அம்மா! அம்மா என்று அழுகின்றோம். கண்ணீர் மழை பொழிகின்றோம். தும்மினாலும், இருமினாலும், தொழில்கள் செய்தாலும், பிறர் எங்களைப் பாராட்டினாலும். சேவை செய்யும் போதும், ''அம்மா'' ''மீனாட்சி'' என்று உன்னைத் தான் அழைக்கின்றோம். எல்லாம் உன் செயல் என்றே கூறுகிறோம். இதனை நீ அறியாமல் இருப்பது நியாயமா?

*

Koviloor Digital Library

நீதிக் கென்றும் துலையானாய், நீசர்க் கென்றும் சிலைஆனாய்
ஊதிப் போடும் திறம்கொண்டாய்
உன்னைப் பாடும் வரம் கொண்டேன்
பாதிப் பின்றி நோய்நீக்கிப் பலமும் எழிலும் பொருள் தந்து
சோதிச் சுடராய் ஒளிசெய்வாய் சொல்மலர் தூவித் தொழுகின்றேன். 57

நீ நீதியிலே என்றும் தராசு! கயவர்கட்கு எப்பொழுதும் நீ வெறும் சிலையாக இருக்கிறாய். எந்த வியாதியையும் துயரத்தையும் ஊதிப் பறக்க வைக்கும் திறம் கொண்டவள் நீ. உன்னைப் பாடுகின்ற வரம் எனக்கு இருக்கிறது. எனக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாமல் நோய்களை நீக்கி உடலுக்குப் பலமும் அழகும் செல்வமும் தந்து, சுடரொளியாக என்னைச் செய்வாயாக... பாமாலை பாடி வணங்குகிறேன்.

✸

தொழுகின் றேன்நான் தினந்தோறும்,
தோற்றம் நீஇனும் தரவில்லை
அழுகின் றேன்நான் கவிபாடி, அசரீ ரிஎதும் கேட்கவிலை.
விழுகின் றேன்உன் சந்நிதியில், விடைமேல் ஏறிவந்ததிலை
எழுகின் றேன்நான் உனதாணை எனதிரு விழியும் நீதானே! 58

உன்னை நான் நாள்தோறும் வணங்குகிறேன். நீ இன்னும் என்முன்பு தோன்றவில்லை. கவி பாடி நான் அழுகிறேன்; உன்னுடைய அசரீரி இன்னும் கேட்கவில்லை. உன் சந்நிதியில் கீழே விழுந்து பணிகிறேன். நீ காளை மீது காட்சி தரவில்லை. விழுந்த நான் எழுகிறேன், உனது கட்டளை என்று செயற்படுகிறேன்; என்னுடைய இரண்டு கண்களும் நீதானே!

✸

நீதான் என்னைப் பெற்றிங்கே நெடும்பய ணத்தில் விட்டாலும்
சாதா வாகிப் பதறாமல், சக்கையு மாகிச் சிதறாமல்
சோதா வாகிப் பணியாமல், சோடையும் ஆகிக் குனியாமல்
சூதால் வாழ்க்கையில் நலியாமல் சுடரொளி யாகச் செய்தவளே! 59

Koviloor Digital Library

நீ என்னைப் பெற்று நீண்ட இந்த வாழ்க்கைப் பயணத்தில் விட்டாலும், நான் சாதாரண மனிதனாகிப் பதறாமல், சக்கை ஆகிச் சிதறாமல், சோதாவாகி யாருக்கும் அடிமையாகாமல், சோடை போய்க் குனியாமல், வஞ்சனையால் வாழ்க்கையில் தேயாமல், சுடரொளியாக என்னைச் செய்தவளே!

★

செய்தவ ளேஉன் முகம்காட்டு செந்தமிழ் பொழியும் வாய்காட்டு
பெய்தவம் பேணும் தாள்காட்டு பேரருள் பொழியும் விழிகாட்டு
உய்தவம் செய்யும் வழிகாட்டு உத்தம மாகும் மொழிகாட்டு
நெய்தவள் நீயே சிக்கல்இன்றி நேர்த்தியாய் வாழ வழிகாட்டு. 60

சுடரொளியாக என்னைச் செய்த தாயே! உன் முகத்தைக் காட்டு. செந்தமிழ் பேசும் உன் செவ்வாயைக் காட்டு. தவம் செய்யும் உன் திருவடியினைக் காட்டு. அருள் பொழியும் உன் கண்களைக் காட்டு. நான் உய்யத் தவம் செய்தற்குரிய வழியினைக் காட்டு. நான் உத்தமனாவதற்குரிய மொழியினைக் காட்டு. என்னை நெய்து உருவாக்கிய நீ என்னிடத்தில் உள்ள சிக்கல்களை நீக்கி நான் நன்கு வாழ வழிகாட்டு.

★

வழியினைக் காட்டத் தாமதமா? வறுமையும் நோயும் வதைபடவே
விழியினைக் காட்டி அருள் செய்ய விளக்கொளி காட்டி வாதாயே!
பழியிலா வாழ்க்கை கொடுத்தவளே! பாதயாத்திரை விடுத்தவளே
பொழிகரு ணைக்கோர் மேகம்நீ புதையருள் வேட்கும் தாகம் நான். 61

நல்வழி காட்டத் தாமதமா? என்னிடம் உள்ள ஏழ்மையும், வியாதியும் நீங்க உன் விழிகாட்டி அருள்செய்ய விளக்கின் ஒளிகாட்டி வருக தாயே! பழியில்லாத வாழ்க்கையை எனக்குத் தந்தவளே! என்னைப் பாதயாத்திரை செல்லச் செய்தவளே! பொழிகின்ற கருணையில் நீ மேகம்; உன்னிடம் புதைந்து கிடக்கும் அருளைப் பெறத் தவித்திருப்பவன் நான்.

★

Koviloor Digital Library

தாகமாய்த் தேவிஉன் தாள்பணிந்து தமிழமுதத்தில் தோய்ந்ததுவும்
வேகமாய் உன்பெருங் கோயிலுக்குள் வேதம் முழங்கி வந்ததுவும்
ஆகமம் வாழும் சந்நிதியில் அம்மா எனக்குரல் எழுப்பியதும்
சாகசம் என்றா எண்ணுகிறாய் சத்தியம் வாழும் நெஞ்சமிது! 62

உன் அருளைப் பெறும் தாகத்துடன் உன் திருவடியினைத் தொழுது உனது தமிழ்ப்பாடல்களில் நான் மூழ்கியதும். வேகமாய் உனது பெருங்கோயிலுக்குள் வேதமுழக்கத்துடன் நான் வந்ததுவும், ஆகம வழிபாடு நிறைந்த உன் சந்நிதியில் அம்மா என்று நான் கத்தியதும், சாகசச் செயல் (நடிப்பு) என்றா எண்ணுகிறாய்? என்னுடைய நெஞ்சம் சத்தியம் வாழும் இடமாகும். நான் செய்தவை போலி அல்ல; சத்தியம் (உண்மை).

★

நெஞ்சமே கோயில் என்றாலும் நித்தில மாய்நீ வாழுகிறாய்
கொஞ்சமோ உன்னைப் பாடியதும்,
கோயிலில் வலமாய்த் தேடியதும்
தஞ்சமாய் உன்பதம் சூடியதும் தமிழ்மறை கேட்டே ஆடியதும்
அஞ்சனம் எழுதிய கண்இமையே!
அரைநொடி திறந்தால் தெரியாதா? 63

என் மனமே நீ வாழும் கோயில். அதில் நீ முத்தாக வாழ்கிறாய். உன்னை நான் பாடியதும், கோயிலில் வலம் வந்து தேடியதும். உன் அடிமையாய் உன் திருவடிகளைப் பற்றியதும், திருமுறைகளைக் கேட்டு நான் ஆடியதும், கொஞ்சமா? அது உனக்குத் தெரியாதா? மை தீட்டிய உன் விழிகளை அரை வினாடி திறந்தால் உனக்கு எல்லாம் தெரியுமே!

★

தெரியா ததுவும் இங்குண்டோ?
தென்னா டுடைய சிவன்தேவி!
விரியா மலரால் மணமுண்டோ?
விளையாப் பயிரால் பலன் உண்டோ?
தெரியா விழியால் ஒளியுண்டோ?
தெளியா அறிவால் வழியுண்டோ?
குறியாய் உன்னைச் சரண்உற்றோம்
கோலக் கிளியே! மொழிபேசாய். 64

Koviloor Digital Library

உனக்குத் தெரியாததும் இங்கு இருக்கிறதா? தென்னாட்டில் அதிகக் கோயில் கொண்டுள்ள சிவனின் தேவியே! மலராத மலரால் மணமுண்டோ? விளையாத பயிரால் பலன் உண்டோ? தெரியாத கண்ணால் பார்வை உண்டோ? தெளியாத அறிவினால் பலன் உண்டோ? ஆகவே உன்னையே குறிக்கோளாகக் கொண்டு சரண் அடைந்தோம். கிளியே! நல்ல வார்த்தைகளைக் கூறுவாயாக.

★

பேசாக் குமரன் குருபரனாய்ப் பிள்ளைத் தமிழைப் பாடுகையில்
ஆசா பாசம் இல்லாநீ அன்னைத் தமிழாய் அதை ஆக்கக்
கூசா மல்நீ தளர்நடையாய்க் குழந்தை வடிவில் வந்ததெலாம்
ஆசா ரம்தான் என்றாலும் அம்மா அக்கதை மீளாதோ? 65

வாய்பேசாத குமரகுருபரர் சிறுவனாக இருந்தபோது திருச்செந்தூரில் முருகன் சந்நிதியில் பேசினார். பாடல் பாடினார். அவர் உன் சந்நிதியில் ''மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்'' பாடித்திருமலை நாயக்கர் முன் அரங்கேற்றிய பொழுது, நீ மூன்று வயதுக் குழந்தையாக நடந்து வந்து குமர குருபரருக்குத் திருமலை நாயக்கரின் முத்து மாலையை எடுத்துப் பரிசளித்துக் குமர குருபரர் பாடிய பிள்ளைத் தமிழை அன்னைத் தமிழாய் ஆக்கினாய். அந்நிகழ்ச்சி சிறப்பானது; அது போல் மீண்டும் நடக்காதா? எமக்கும் வரமாட்டாயா?

★

மீளா ததுமோர் சரித்திரமா? மேன்மக் களென எமைஆக்கிக்
கேளாக் கவியெலாம் கேண்மையுடன்
கேட்டிடத் தளர்நடை இட்டுவரின்
தூளாய்க் கிடப்பவர் கவிதையெலாம்
தொல்காப் பியமாய் ஆகாதோ?
வாளாக் கிடப்பவர் வாழ்க்கையெலாம்
வையைப் புனலாய் வளராதோ? 66

சரித்திரங்கள் மீண்டும் வரும் என்பார்கள். நீ மீண்டும் நடந்து வராவிட்டால் ஏற்கெனவே நடந்தது என்ன சரித்திரம்? நீ எங்களை உயர்ந்தவர்கள் ஆக்கி, எங்களது கவிதைகளைக் கேட்கக் குழந்தையாக அன்புடன் நடந்து வந்தால், தூசியாய்க் கிடக்கும் எங்கள் கவிதைகள் தொல்காப்பியம் போல் ஆகாதோ? சும்மா கிடப்பவர் வாழ்க்கையெலாம் வைகை நீர் போல் வளராதோ?

Koviloor Digital Library

வளரா ததுமோர் பொருளாமோ? வற்றாச் சுடரே! அருட்புனலே!
தளரா நெஞ்சம் தந்தவளே! தமிழும் கொஞ்சம் தந்தவளே!
உளறா மல்நீ கிடக்கவென உலகத் தார்பழி சொன்னாலும்
அலறா மல்நான் நிற்பேனா? அம்மா வின்முகம் மறப்பேனா? 67

வளர்ச்சி இல்லாதது ஒரு பொருள் ஆகுமா? வற்றாத ஒளியே! தீர்த்தமே! கலங்காத மனத்தைத் தந்தவளே! தமிழும் சிறிது தந்தவளே! நான் ஏதோ பாடுகிறேன்; ஆனால் நான் உளறுகிறேன் என்று உலகம் என்னைப் பழித்தாலும் அம்மா உன்னைப் பார்த்து அலறாமல் நான் இருப்பேனா? உன் முகத்தை நான் மறப்பேனா?

★

மறப்பேன் இந்த வையம்எலாம்;
மகனே என்றெனை அணைப்பாயேல்
துறப்பேன் சொத்துத் தொகைஎல்லாம்
தொடரும் பிறவித் துயர்நீக்கித்
திறப்பேன் தேவி நீவாழும் தெய்வக் கோவில் திருக்கதவம்
''சுரப்பேன் அருளார் அமுதம்'' எனச் சொல்லித் தாயே வருவாய்நீ.
68

மகனே என்று என்னை நீ அணைத்தால் இந்த உலகத்தை நான் மறப்பேன். சொத்து, பொருள் எல்லாவற்றையும் துறப்பேன். தொடர்ந்து வரும் பிறவித் துன்பத்தை நீக்கி நீ வாழும் சொர்க்க வாசல் கதவைத் திறப்பேன். ''அருள் அமுதம் உனக்குத் தருவேன்' என்று சொல்லி மீனாட்சித்தாயே! என் முன் வருக.

★

வருவாய் எனக்கு நீயேதான்; வையை நீரில் ஆடியதும்
உருவாய்த் தழலில் குழவிஎன ஒருநாள் நீமுன் தோன்றியதும்
குருவாய் வந்த குழந்தைக்குக் கொற்கை முத்தைக் கொடுத்ததுவும்
கருவாய் வந்தது முதல் அறிவேன் கலைமா மதுரைக் கண்மணியே!
69

Koviloor Digital Library

எனக்கு வருமானம் நீதான்! தாயே! நீவைகை நீரில் ஆடினாய்; புத்திர காமேஷ்டி யாகத்தில் ஒரு நாள் மூன்று வயதுக் குழந்தையாக (தடாதகையாக) நீ அவதரித்தாய். குமர குருபரர் உன் சந்நிதியில் ''மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்'' பாடுகையில் நீ குழந்தையாக வந்து அவர்க்குக் கொற்கை முத்து மாலையைப் பரிசாகக் கொடுத்தாய். இந்தக் கதைகளை எல்லாம் நான் கருவுற்ற நாள் முதலாக அறிவேன். கலை நிறைந்த மதுரைக் கண்மணியாகிய மீனாட்சி!

✱

கண்ணே! மணியே! மீனாட்சி! கலையே! அலையே! காமாட்சி!
விண்ணே! சுடரே! விசாலாட்சி! வெயிலே! மழையே! நீலாட்சி!
பண்ணே! இசையே! பழந்தேவி! பயிரே! உயிரே! பாண்டியர்கள்
பெண்ணே! அரசி மீனாட்சி! பேசா மடந்தை யாரம்மா? 70

மீனாட்சி! நீதான் கண்! மணி! கலை! அலை! காமாட்சி! விண்! (ஆகாயம்), ஒளி, விசாலாட்சி! வெயில்! மழை! நீலாயதாட்சி(நாகை)! ராகம்! இசை! தேவி! பயிர்! உயிர்! பாண்டியர்களின் பெண் (தடாதகை)! அரசி! ஏன் பேசா மடந்தையாக (பெண்ணாக) இருக்கிறாய்!

✱

யாரைக் கண்டுஎன் குறைசொல்வேன்?
யமுனைக் கரையான் தங்கை உனைக்
காரைப் பிழியும் சடைக்கற்றைக்
கங்கைக் கரையான் மணம் கொள்ள
வாரைக் கீறும் வளர்குரும்பை வையைக் கரையான் ஆனதனால்
பாரைக் காக்கும் தாயேநான் பாலக் கரையான் ஆகின்றேன். 71

தாயே! யாரைப் பார்த்து நான் என் குறைகளைச் சொல்வேன்? யமுனை ஆற்றங் கரையான் ஆகிய திருமாலுக்கு நீ தங்கை. மேகத்தைப் பிழியும் சடையில் கங்கையை வைத்திருப்பவனும் கங்கைக் கரைக்குச் சொந்தமானவனும் ஆன சிவபெருமான் உன்னை உன் (மார்பு திரண்ட) பருவகாலத்தில் மதுரையில் மணந்ததனால் கங்கைக் கரையான் ஆன அவன் வைகைக் கரையான் ஆகிவிட்டான். நீ பாரைக் காக்கிறாய். நான் பாலகனாக (பாலம் பருவக் கரையில் நிற்கிறேன்) ஆகிறேன்.

Koviloor Digital Library

ஆகின் றேன்நான் உன்னாலே அச்சம் மிச்சம் எதுமில்லை
பாகின் நேர்மொழி இல்லையெனப் பாட்டும் பெரிய தொல்லை என
ஏகின் தாயே என்செய்வேன்? என்னால் இயன்றதும் இதுதானே!
கோகி னூரின் வயிரங்கள் கொட்டி அளக்க எனக்குண்டா? 72

உன்னால் நான் உத்தமன் ஆகி வருகின்றேன். எனக்கு அச்சமும் இல்லை; மிச்சமும் இல்லை. நான் உன் முன் பாடுகிறேன். அப்பாட்டு தேன்பாகு போல் இல்லை என்று, பெரிய தொல்லை என்று நீ போனால் நான் என்ன செய்வேன்? என்னால் செய்யக் கூடியது பாடக்கூடிய ஒன்று தானே! தலை சிறந்த கோகினூர் வயிரங்களை உனக்குக் கொடுக்க என்னிடம் வசதி இருக்கிறதா?

✸

உண்டா என்றதும் அம்மாநீ உயரும் கோபுரம் காண்கின்றாய்
அண்டா வாங்கிட முடியாதான் அலையை வாங்கிடல் எவ்வாறு?
மண்டாய் இருந்தவன் விஞ்ஞான மதியைப் பெற்றிடல் எவ்வாறு?
தொண்டால் உன்னைப் பெற்றிடவே
தொத்தித் தொத்திச் சோர்கின்றேன். 73

''என்னிடம் வசதி இருக்கிறதா?' என்று நான் கேட்டதும் தாயே நீ உயர்ந்திருக்கும் கோபுரத்தைப் பார்க்கிறாய்? (கோபுரம் உயர்ந்தது, ஆனால் நான் தாழ்ந்தவன்) அண்டா குண்டா வாங்க முடியாதவன் அலைகடலை வாங்க முடியுமா? மண்டாக இருப்பவன் விஞ்ஞானியாக ஆக முடியுமா? மண்டாக இருக்கும் நான் தொண்டு செய்து உன்னை அடைய முயன்று சோர்கிறேன் (களைக்கிறேன்).

✸

சோர்கின் றேன்எனைக் காப்பாற்றச் சொக்கே சன்மனை வந்தவளே!
ஊர்கின் றேன்நான் சீர்காழி உயர்சம் பந்தன் ஆகவிலை
தேர்கின் றேன்நான் யாவையுமே திருநாவுக் கரசு ஆகவிலை.
ஆர்கின் றேன்நான் இல்லறமும் ஆரூரன்பேறு அடையவிலை.
74

Koviloor Digital Library

சோர்வடையும் என்னைக் காப்பாற்றச் சொக்கேசப் பெருமானின் மனைவியாக வந்த மீனாட்சி! உன்னை நோக்கி எறும்புபோல் ஊர்கின்றேன்; நான் சீர்காழிச் சம்பந்தப் பெருமான் ஆகவில்லை. எல்லாவற்றையும் ஆராய்ந்து தெளிகின்றேன். ஆனாலும் திருநாவுக்கரசர் ஆகவில்லை. இல்லறத்தில் நான் இன்புறுகிறேன்; ஆனாலும் சுந்தரமூர்த்தி நாயனார் அடைந்த பேற்றினை அடையவில்லை.

★

அடைய விலையே ஆனாலும் அம்மா! உன் அருட் சோதிமுகம்
கடையேன்காண வழிசெய்தால் கடைக்கண் பார்வை ஒளிசெய்தால்
படையே வரினும் எதிர்நிற்பேன் பகையே வரினும் பணிசெய்வேன்
தடையே வரினும் தவறிழையேன் தமிழே அறியச் சபதம் இது! 75

அப்பர், சுந்தரர், சம்பந்தர் அடைந்த பேறுகளை நான் அடையாவிட்டாலும். கடையவனாகிய நான் உனது அருட்சோதி முகத்தைப் பார்க்க நீ வழிவகுத்தால், உன் கடைக்கண் பார்வை என் மீது பட்டால், படையே என்னை எதிர்த்து வந்தாலும், பகைகள் திரண்டாலும் அஞ்சாமல் உன் பணி செய்வேன். தடைகள் வந்தாலும் தவறு செய்யமாட்டேன். தமிழ் மீது சத்தியமாகச் சபதம் செய்கின்றேன்.

★

இதுவும் அதுவும் எதுஒன்றும் இயல்பாய் அறிய மாட்டேனை
மெதுவாய்த் தமிழால் மொழிஊட்டி
மேலாம் அருளால் அறிவூட்டிப்
பொதுவாய்த் திறமை கற்பித்துப் பொழியும் புலமை சேர்ப்பித்துப்
புதுவாய் வந்தன காண்பித்துப் போரா டத்தான் விட்டவளே! 76

இது, அது என்று எந்த வித்தியாசமும் இயல்பாய் அறியும் அறிவில்லாத என்னை மெல்லத் தமிழ் ஊட்டி, அருளால் அறிவூட்டி, பொதுவான திறமைகளைக் கற்பித்து, நல்ல புலமையும் சேர்ப்பித்து, புதுமைகளைக் காட்டி, வாழ்க்கையில் போராட விட்டவளே!

★

Koviloor Digital Library

விட்டவ ளேஎன் நற்றாயே! வினைப்பய னாலே வாழ்க்கையிலே
பட்டதெ லாம்இனிப் போதாதா? பாரம் சுமந்ததும் தீராதா?
கட்டங்கள் எத்தனை அதனாலே கண்ணீர் வற்றியது அறியாயோ
கொட்டம் அடித்திடும் நோயாலே கோழைகள் ஆவதும் சரிதானா? 77

போராட விட்ட என்தாயே! வினையின் பயனால் வாழ்க்கையில் நான் பட்ட துயரங்கள் போதாதா? பாரம் சுமந்து தளர்ந்ததும் தீராதா? எத்தனையோ துன்பங்களினால் நான் அவதிப்பட்டு, அழுது, கண்ணீர் வடித்ததை நீ அறிய மாட்டாயா? உடம்பில் கோலாகலமாகக் கொட்டம் அடிக்கும் வியாதிகளால் நாங்கள் கோழைகள் ஆவதும் உனக்குச் சரிதானா?

★

சரிதானா எனக் கேட்டாலும் சக்தியே! நான் உனைத் தொழுதாலும்
அரிதா கத்தான் வந்தபிணி ஆட்டிப் படைத்திட அழுகின்றேன்
நரிதா னோஒரு பரியாக நன்மா ணிக்க வாசகரால்
பெரிதா கத்தான் செய்தவளே! பிணியை நீக்க முடியாதா! 78

சரிதானா என்று உன்னை நான் தைரியமாகக் கேட்டாலும். உன்னை வணங்கினாலும் அரிதாக வந்த வியாதி ஆட்டி அலைக்க அழுகின்றேன். நரியைக் குதிரையாக மாணிக்கவாசகர்க்காக ஆக்கிய நீ என் வியாதியைத் தீர்க்க முடியாதா?

★

முடியா ததுமோ உனக்குண்டு? முயலும் நாயை விரட்டிடுமேல்
செடியாம் பிணியைத் தூர்நீக்கிச் சிதைக்கத் தேவி அருள்செய்வாய்
துடியாய் வாழும் உலகத்தில் துவளும் கொடியாய் விடலாமா?
படியாய்க் கிடந்துன் பணிசெய்வேன் பச்சைக் கிளியே பாலூட்டு.79

உன்னால் முடியாததும் உண்டா? பாஞ்சாலங்குறிச்சியில் முயல் நாயை விரட்டியது உண்டு. (கட்டபொம்மன் பூமியில்). உன்னால் வியாதியை விரட்ட முடியாதா? செடிபோல் மண்டியுள்ள வியாதியை வேரோடு களைந்து அருள் புரிவாயாக! துடிப்பாய் வாழும் உலகத்தில் நான் துவண்டு போன கொடியாகலாமா? உன் வாசலுக்கு நான் படியாகக் கிடந்து பணி செய்வேன். பச்சைக் கிளியே! பாலூட்டிக் காப்பாயாக!

Koviloor Digital Library

பாலூட் டித்தான் உயிர்காத்துப் பழம்ஊட் டித்தான் அருள் தந்து
தாலூட் டித்தான் தமிழ்தந்து தரமூட் டித்தான் சால்பாக்கிக்
காலூட் டத்தைத் தந்தவளே! கையா ரத்தான் உழைத்திடவே
மேலூட் டத்தைத் தந்தவளே மெய்ஞ்ஞா னத்தைத் தந்திடுவாய். 80

பால் ஊட்டி உயிர்காத்து, பழம் ஊட்டி அருள் தந்து, தாலாட்டித் தமிழ் தந்து, தரம் தந்து சால்புடையவனாக்கி, கால் ஊன்றி நிற்கும் படியாகச் செய்தவளே! கையார உழைத்து முன்னேற உடம்புக்கு வலு தந்தவளே! மெய்யறிவைத் தந்திடுக.

✵

தந்திடு வாயே மீனாட்சி! தமிழ்மா மதுரைத் தாயேநின்
செந்திரு மேனி எழில்கண்டும், செவ்வரி படரும் விழிகண்டும்
சிந்துரத் திலக நுதல்கண்டும் சிரிப்பினை உமிழும் இதழ்கண்டும்
வந்தனை கோடி செய்யாமல் வாழ்வதும் இங்கோர் வாழ்வாமோ?
81

மீனாட்சி! மெய்யறிவைத் தந்திடுக! தமிழ் மதுரைத் தாயே! உன் சிவந்த மேனி அழகு கண்டும், சிவந்த கோடுபடர்ந்த கண்கள் கண்டும், குங்குமத் திலகம் அணிந்த நெற்றி கண்டும். சிரிக்கும் உதடு கண்டும். வணக்கம் கோடி செய்யாமல் வாழ்வதும் ஓர் வாழ்க்கையா?

✵

வாழ்வினை வாழத் தெரியாமல் வையகம் தானும் புரியாமல்
சூழ்வினை ஏதும் செய்யாமல் சொத்தினை ஈட்டி உய்யாமல்
கோள்நிலை நெஞ்சில் கொள்ளாமல் கொள்கையும் சிறிது தள்ளாமல்
ஆள்நிலை கண்டும் அணுகாமல் அன்னையே
நின்பதம் சதமானேன். 82

வாழ்க்கையே வாழத் தெரியாமல், உலகமும் புரியாமல், ஆய்ந்து செய்ய வேண்டிய காரியங்களையும் செய்யாமல், சொத்தினைச் சம்பாதித்து உயராமல், கிரகங்களின் நிலையையும் மனத்தில் கருதாமல், கொண்ட கொள்கையையும் விட்டுக் கொடுக்காமல், ஆள்களையும் ஆராய்ந்து ஒட்டிக் கொள்ளாமல். அன்னையே நான் தனியனாக இருந்து உன் திருவடியே சரணம் ஆனேன்.

Koviloor Digital Library

சதமா னேன்நான் தாயேநின் சத்திய விளக்கின் ஒளி எங்கே?
பதமா னேன்நான் தாயேநின் பண்பாடு உமிழும் மொழி எங்கே?
மதமா னேன்நான் புகழாலே மாதா. நின்திரு வடிஎங்கே
விதமா னேன்நான் பலவாறாய் வெற்றித் தாயே! காப்பாற்று 83

உன் திருவடியைச் சரண் அடைந்தேன். உன்னிடம் உள்ள சத்திய விளக்கின் ஒளி எங்கே? நான் பக்குவப்பட்டு விட்டேன். பண்பாட்டைக் காட்டும் உன் மொழி எங்கே? நான் புகழால் ஆணவம் கொண்டுவிட்டேன்; அன்னையே என்னை நெறிப் படுத்தும் உன் திருவடி எங்கே? பலவிதமாக நான் இருந்தாலும் வெற்றித் தாயே! நீ காப்பாயாக.

✱

காப்பாற் றம்மா மீனாட்சி! கலைமா மதுரைத் தாயேநான்
பூப்போட் டுன்னைப் போற்றுகிறேன்
பொற்றா மரைநீர் ஆட்டுகிறேன்
நாப்போற் றும்நான் கரந்தாலும், நடைபோ டும்கால் மறந்தாலும்
பாப்போற் றும்நூல் பலயாத்தே பாண்டியர் தேவி பதம்வைத்தேன்.
84

கலை மதுரைத் தாயே! மீனாட்சி! காப்பாற்றம்மா! பூத்தூவி உன்னைப் போற்றுகிறேன். பொற்றாமரை நீர் அபிஷேகம் செய்கிறேன். நான் மறைத்தாலும் என் நாக்கு உன்னைத் துதிக்கும். நான் மறந்தாலும் கால் உன்னைச் சுற்றிப் பிரகாரம் வரும். பல கவிதை நூல்கள் பாடிப், பாண்டியர்கள் தேவியே! உன்பாதத்தில் வைத்தேன்.

✱

Koviloor Digital Library

வைத்ததும் தாயே கொள்வாயோ?
வளர்பொற் றாமரைப் பொய்கையிலே
கைத்தலம் ஏந்தி விடுவாயோ? கடைப்பெரும் சங்க காலத்தை
உய்த்ததும் வள்ளுவர் குறளம்மா, உயர்திரு சங்கப் பலகையிலே
வைத்திடு வாய்என் கவிதைகளை வண்டமிழ்த்
தாய்இரு கையாலே. 85

என் கவிதை நூல்களை உன் பாதத்தில் நான் வைத்ததும் அவற்றை நீ ஏற்றுக் கொள்வாயோ? உன் கையினால் அவற்றைப் பொற்றாமரைக் குளத்தில் விடுவாயோ? கடைச் சங்க காலத்தைச் சிறப்பித்தது திருக்குறள். அது சங்கப் பலகையில் ஏறியது. அதுபோல் என் கவிதைகளை உன் கைகளில் ஏந்திச் சங்கப் பலகையில் வைக்க வேண்டும்.

★

கையா லே எனை ஏந்தாயோ?
கனிவாய் உச்சி மோந்தம்மா
பொய்யா மறையெலாம் புகலாயோ?
பொழிகரு ணைக்கண் நீராட்டிப்
பெய்யாத் திருவருள் பெய்யாயோ?
பேசா மொழியெலாம் பேசாயோ?
உய்யா மல்நான் போவேனோ?
உதையா யோநீ காலனையே. 86

என்னையும் உன் திருக்கரங்களால் எந்த மாட்டாயா? என்னை உச்சி மோந்து திருமறைகளைக் கற்பிக்க மாட்டாயா? உன் கண்களால் கருணை நீராட்டி அருள் மழை பொழிய மாட்டாயா? உபதேசங்கள் செய்ய மாட்டாயா? என்னை உய்விக்க மாட்டாயா? எமனை உதைத்து விரட்ட மாட்டாயா?

★

Koviloor Digital Library

காலனை வெல்ல வழியும்உண்டோ?
காத்திருந் தேஉயிர் கொள்வன் அவன்
பாலனை உண்ட முதலையிடம் பாட்டினால் மீட்ட சுந்தரரும்
ஆளனைத் தீண்டிய அரவொழிய அவனுயிர் மீட்ட சம்பந்தர்
வாளர வால்வீழ் உயிர் எழவே வாகீ சரும்பே ரருள் புரிந்தார். 87

எமனை வெல்ல வழி இருக்கிறதா? அவன் மறைந்திருந்து நேரம் வந்ததும் உயிரைக் கவர்ந்து செல்வான். அவிநாசிக் குளத்தில் பாலனை உண்ட முதலையிடம் இருந்து சுந்தரர் பாட்டுப்பாடிப் பாலனை மீட்டார். திருமருகலில் செட்டிப் பெண்ணின் கணவனைப் பாம்பு தீண்டி அவன் இறந்த பொழுது அங்கு வந்த திருஞானசம்பந்தர் பதிகம் பாடி இறந்தவனை உயிர்ப்பித்தார். திங்களூரில் அப்பூதி அடிகளின் மகனைப் பாம்பு தீண்டி அவன் இறந்த பொழுது திருநாவுக்கரசர் பதிகம் பாடி அவனை உயிர்ப்பித்தார்.

✵

புரிந்ததோர் அற்புதக் கதையாவும் புராணங்கள் கூறக் கேட்டதனால்
சரிந்திடும் ஆயுளை நீட்டிடவும் சங்கடக் காலனை ஓட்டிடவும்
அறிந்ததோர் நல்வழி சரணமதே! ஆதி பராசக்தி அருள் புரியே
இரிந்திடக் காலனை ஓட்டிடுக. இணையிலாப் பேரருள் கூட்டிடுக.
88

இறந்தவர்களை உயிர்ப்பித்த அற்புதமான கதைகள் யாவற்றையும் புராணங்கள் வாயிலாகக் கேட்டு நம்புவதால் தாயே! மீனாட்சி! ஆதிபராசக்தியே! குறையும் ஆயுளை நீட்டித் தருக; துன்புறுத்தும் எமனை விரட்டுக. அதற்கு உரிய வழி உன்னைச் சரண் அடைவதே. உன்னைச் சரண் அடைந்தோம். போகும்படியாக எமனை விரட்டி அருள் புரிக.

✵

Koviloor Digital Library

கூட்டிட வேண்டும் நல்லவரை;
குறைத்திட வேண்டும் தீயவரை
வாட்டிட வேண்டும் வறுமையினை;
வதைத்திட வேண்டும் நோயினையே
காட்டிட வேண்டும் நன்மார்க்கம்.
கலைத்திட வேண்டும் துன்மார்க்கம்.
பூட்டிட வேண்டும் பொறுமையினை.
புதைத்திட வேண்டும் சிறுமையினை. 89

நான் பழகுகிற வட்டத்தில் நல்லவர்கள் எண்ணிக்கையைப் பெருக்குக; தீயவர்கள் எண்ணிக்கையைச் சுருக்குக. என் வாழ்க்கையில் உள்ள வறுமையினைப் போக்குக. நோயை நீக்குக. நன்மார்க்கத்தை (நல்வழியை) எனக்குக் காட்டித் துன்மார்க்கத்தை விலக்குக. பொறுமையை எனக்குத் தந்து, சிறுமைக் குணங்களை நீக்குக.

✱

சிறுமைகள் ஆடும் ஞாலத்தில் செம்மைகள் ஓடும் காலத்தில்
பொறுமையின் உருவாய் வாழ்ந்திடவே
புகழ்திரு வாசகம் போற்றிடினும்
அருமையை உணர்ந்திடும் ஆள்இல்லை.
அன்பினை உணர்ந்திடும் நாள் இல்லை
ஒருமையாய் உன்திருச் சந்நிதியில்
ஒண்டமிழ் பாடிப் பரவிடுவோம். 90

இன்று சிறுமைகள் (தீமைகள்) உலகத்தில் ஆட்டம் போடுகின்றன. நல்ல பண்புகள் ஓடிப்போய் விட்ட காலம் இது. இக்காலத்தில் பொறுமையோடு வாழ்ந்தாலும், புகழ் மிக்க திருவாசகத்தைப் போற்றினாலும், அந்த அருமையை யாரும் உணரவில்லை; அன்பைப் புரிந்து கொள்ளவில்லை. ஆகவே ஒருமனத்தோடு உன் சந்நிதிக்கு வந்து உயர்தமிழால் உன்னைப் பாடி வணங்குகிறோம்.

✱

Koviloor Digital Library

பரவிட என்றே நாதந்தாய்; பாடிட என்றே மொழிதந்தாய்
கரவிடம் நெஞ்சில் கொண்டதனால் காற்றிடம்
கொண்ட உலகத்தில்
உறவிடம் இன்றித் திரிவோர்கள் உன்னிடம் வந்தே சேர்ந்தாலும்
துறவிடம் கொள்ளா இதயத்தால் தோற்றம் தந்தே துயர் தீர்ப்பாய் 91

உன்னைப் பாடிப்பரவுதற்காகவே எனக்கு நாக்கைத் தந்தாய்; நல்ல தமிழைத் தந்தாய். மனத்தில் வஞ்சகம் கொண்ட சிலர், காற்றுச் சூழ்ந்த இந்த உலகத்தில், உறவினர் இல்லாமல் அலைந்து, இறுதியில் நீயே கதி என்று உன்னிடம் வந்து வணங்கினால் நீ அவர்களைத் துறந்து விடாதே. நீ அவர்கள் முன் தோற்றம் தந்து அவர்களது துயர்களை நீக்குவாயாக.

✸

தீர்த்திட வேண்டும் நோய்நொடிகள்;
திளைத்திட வேண்டும் வாழ்துறைகள்
ஆர்த்திட வேண்டும் சன்மார்க்கம்;
அழித்திட வேண்டும் ஊழல்எலாம்.
பார்த்திட வேண்டும் அறவோரை;
பகைத்திட வேண்டும் கரவோரை;
ஈர்த்திட வேண்டும் அம்மா உன்
இணையடி காட்டி இசைவிப்பாய். 92

அம்மா! எங்களுக்கு உள்ள நோய் நொடிகளைத் தீர்க்க வேண்டும். நாங்கள் வாழ்வதற்கு உரிய நல்ல வழிகளில் இன்புற வேண்டும். சன்மார்க்கம் தழைத்தோங்க வேண்டும்; ஊழல்களை எல்லாம் அழிக்க வேண்டும். தர்ம நெறியில் வாழ்வோரை நீ கண்பார்க்க வேண்டும். வஞ்சகர்களை நீ அழிக்க வேண்டும். உன் இரு திருவடிகளைக் காட்டி எல்லாரையும் ஈர்த்து நலம்புரிக.

✸

Koviloor Digital Library

இசைத்திட வேண்டும் நல்வாழ்க்கை இயலிசை
நாடகத் தமிழ்த் தாயே!
அசைத்திட வேண்டும் புலன்ஆசை;
அடைத்திட வேண்டும் பொருளாசை.
தசைத்திற னாலே பொறிஇன்பம் தவித்திட வைக்கும் வேளையிலே
திசைத்திறம் எல்லாம் தெரிந்த அருள் தெய்வமே
காக்கத் துணை வருக. 93

நல்வாழ்க்கை எங்களுக்கு அமைய அருள்புரிக. இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழையும் வளர்க்கும் தாயே! ஐம்பொறி ஆசைகளை நீ எங்களிடம் இருந்து நீக்க வேண்டும். பொருள் ஆசை ஏற்படாமல் தவிர்க்க வேண்டும். சிற்றின்ப வேட்கையில் தவறு செய்யாமல் நீ எங்களைக் காக்க வேண்டும்.

★

வருகவே தாயே மீனாட்சி! வளர்கரு ணைத்திறம் கொண்டவளே!
உருகவே உன்னைப் பாடியதும் உன்திரு வாசலை நாடியதும்
பெருகவே மனநலம் ஓங்கியதால்
பிணிதரும் ஐம்பொறி தூங்கியதால்
அருகவே ஆசைகள் ஓய்ந்திடவே
அன்னையே நின்னருள் தோய்ந்ததுவே. 94

தாயே மீனாட்சி நீ வருக! கருணை மிகுந்தவளே! உருகி உன்னைப் பாடியதும். உன் சந்நிதியில் வந்து வணங்கியதும், மனநலம் பெருகியது; ஐம்பொறி ஆசைகள் குறைந்தன; உன் திருவருள் நிறைந்தது.

★

தோய்ந்ததும் நின்திரு வருளாலே;
தொடர்ந்ததும் நின்இரு விழியாலே
ஆய்ந்ததும் மறையெலாம் உன்னாலே
அடைந்ததும் நின்னடி தன்னாலே
காய்ந்தது போதும் கடைத்தேற்று; கனிந்தது போதும் முகம்காட்டு
தேய்ந்தது போதும் தெளிவூட்டு;
திகைத்தது போதும் வழிகாட்டு. 95

Koviloor Digital Library

உன்னிடம் என் உள்ளம் தோய்ந்ததும் உன்னுடைய திருவருள் தான். உன் விழிக் கருணையினால் உன்னைத் தொடர்ந்து வணங்கினேன். திருமுறைகளை எல்லாம் உன் அருளால் கற்று ஆய்ந்தேன். அதனால் உன் திருவடியை அடைந்தேன். நான் துன்புற்றது போதும்; கடைத் தேறச் செய். நான் கனிந்தது போதும்; உன் முகத்தைக் காட்டு; நான் தேய்ந்தது போதும்; தெளிவடையச் செய்.

★

வழியினைக் காட்ட வேண்டும் அம்மா!
வையையின் நீரில் வளர்பவளே
பழியினைக் கூட்டி உடம்பாக்கிப் பகையினைக் கூட்டி நரம்பாக்கி
அழிவினைக் கூட்டி அறிவாக்கி ஆடிடும் மாந்தர் பொய்ம்மையினை
விழியினைக் காட்டி வேர் அறுத்து
விதியினைக் காட்டும் அருந்துணையே. 96

அம்மா! நீ எனக்கு நல்வழிகாட்ட வேண்டும். வைகைக் கரையில் கோயில் கொண்டவளே! பழியை உடம்பாக்கி, பகையை நரம்பாக்கி, அழிவை அறிவாக்கி, ஆட்டம் போடும் கயவர்களின் வஞ்சகத்தைத் தாயே! உன் விழிகளைக் காட்டி வேர் அறுத்துக் காப்பாயாக. எங்கள் விதியினைக் காட்டும் துணை நீ.

★

துணையே! தென்றல் காற்றானாய் தூயோய்! மணலில் ஊற்றானாய்
புணையே! வாழ்க்கைப் பொருளானாய்!
புனலே! நெஞ்சத்து அருளானாய்!
இணையே இல்லா மானிடமாம் ஏற்றப் பிறவி இதயத்தில்
அணையே போட்டுத் தாழாமல் அம்மா! மானுடம் உய்விப்பாய் 97

எங்களுக்குத் துணையாய் இருக்கும் தாயே! தூயவளே! நீ தென்றல் காற்று; மணலில் ஊற்று, துயர்க் கடலில் தெப்பம்! வாழ்க்கைக்கு உரிய பொருள். தீர்த்தம்! மனத்தின் அருள்! ஒப்பில்லாத இந்த மனிதப் பிறவிகளின் இதயத்தில் தடைகளை எழுப்பித் தாழவிடாமல் உய்விப்பாயாக.

★

Koviloor Digital Library

உய்விப் பாய்எனக் கூடுகிறோம் உன்சர விளக்குகள் ஒளிசெய்யப்
பெய்வித் தாய்நல் அருள்மழையை
பெருநிலம் ஆண்ட மன்னவர்கள்
செய்வித் தார்பெரும் கோபுரங்கள் செந்தமிழ் ஆண்ட பாவலர்கள்
பெய்வித் தார்அருட் பாமழைகள் பிறந்தனை
மதுரையில் தமிழாடி. 98

நீ எங்களை உய்விப்பாய் (வாழ்விப்பாய்) என உன் சந்நிதியில் வந்து கூடுகிறோம். உன் முன்னே உள்ள சரவிளக்குகள் ஒளிபரப்ப நீ அருள் மழையைப் பொழிந்தாய். மதுரையை ஆண்ட மன்னர்கள் பெரிய கோபுரங்களைக் கட்டினார்கள். தமிழ்ப் புலவர்கள் பாடல் மழைகளைப் பொழிந்தார்கள். நீ மதுரையில் பிறந்து தமிழ் நீராடி மகிழ்ந்தாய்.

★

ஆடியும் ஆவணி சித்திரையும், அழகிய மாசியும் வீதிகளாய்க்
கூடிய மாமது ரைத்தேவி! கோபுரம் வான்முகில் தோய்ந்தவளே!
ஆடிய திருவிளை யாடலினால் ஆலவாய் மண்ணில் அமர்ந்தவளே!
பாடியது எழுகடல் உன்முன்னே!
பாற்கடல் அபிஷேகம் கண்முன்னே! 99

ஆடிவீதி, ஆவணிவீதி, சித்திரைவீதி, மாசிவீதி என்று சுற்றிவரும் வீதிகளை மதுரையில் கொண்ட மீனாட்சி! வானத்தைத் தொடும் கோபுரங்களைக் கொண்டவளே! சிவபெருமான் 64 திருவிளையாடல்களைச் செய்தார். நீயும் பல திருவிளையாடல்களைச் செய்து மதுரையில் ஆலவாய் என்று பெயர்பெற்ற கோயிலில் அமர்ந்து அருள்புரிந்தாய். உன் சந்நிதி முன்னே எழுகடல் பாடியது. உன் கண் முன்னே பாற்கடல் அபிஷேகம் நடைபெறுகிறது.

★

Koviloor Digital Library

கண்முன் னேதினம் விழாக்கோலம் காண வருபவர் பலகோடி
பெண்முன் னேசிவம் அடக்கமெனப்பேச வந்த அருட்சக்தி
உன்முன் னேதினம் சந்நிதியில் ஒண்டமிழ் பாடிப் பரவுகிறோம்
பண்முன் னேநீ வந்திடுக பார்த்தால் அன்றிப் பசியாரா. 100

நீ காண உன் விழாக்களையும், உன் கோலத்தையும் (அலங்காரத்தையும்) கண்டு வணங்க வரும் மக்கள் பலகோடி. பெண் முன்னே சிவம் அடக்கம் என்பதை உலகிற்குக் காட்ட வந்த அருட் சக்தி நீ! உன் முன்னே தினந்தோறும் சந்நிதியில் நின்று உயர்தமிழில் பாடி வணங்குகிறோம். எங்கள் பாடலைக் கேட்டு நீ வருவாயாக! உன்னைப் பார்த்தால் அல்லது எங்கள் பசி தீராது. (முதல் பாட்டு ஆரா என்று தொடங்கி நூறாவது பாட்டு ஆரா என்று முடிகிறது).

✱

Koviloor Digital Library

மீனாட்சி போற்றி

1. ஓம் அங்கயற்கண் அம்மையே போற்றி
2. ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி
3. ஓம் அருமறையின் வரம்பே போற்றி
4. ஓம் அறம் வளர்க்கும் அம்மையே போற்றி
5. ஓம் அரசிளங் குமரியே போற்றி
6. ஓம் அன்பர் பிணிமருந்தே போற்றி
7. ஓம் அருந்தவ நாயகியே போற்றி
8. ஓம் அன்புரு அன்னையே போற்றி
9. ஓம் அருள் நிறை அம்மையே போற்றி
10. ஓம் ஆலவாய்க் கரசியே போற்றி
11. ஓம் ஆறுமுகத்தின் அன்னையே போற்றி
12. ஓம் ஆதியின் பாதியே போற்றி
13. ஓம் ஆலய சுந்தரியே போற்றி
14. ஓம் ஆனந்த வல்லியே போற்றி
15. ஓம் இளவஞ்சிக் கொடியே போற்றி
16. ஓம் இமயத் தரசியே போற்றி
17. ஓம் இடபத்தோன் துணையே போற்றி
18. ஓம் ஈசுவரியே போற்றி
19. ஓம் உயிர் ஓவியமே போற்றி

Koviloor Digital Library

20. ஓம் உலகம்மையே போற்றி
21. ஓம் ஊழ்வினை தீர்ப்பாய் போற்றி
22. ஓம் எண்திசையும் வென்றோய் போற்றி
23. ஓம் ஏகன் துணையே போற்றி
24. ஓம் ஐங்கரன் அன்னையே போற்றி
25. ஓம் ஐயம் தீர்ப்பாய் போற்றி
26. ஓம் ஒப்பிலா அமுதே போற்றி
27. ஓம் ஓங்கார சுந்தரியே போற்றி
28. ஓம் கற்றோர்க்கினியோய் போற்றி
29. ஓம் கல்லார்க்கும் எளியோய் போற்றி
30. ஓம் கடம்பவன சுந்தரியே போற்றி
31. ஓம் கல்யாண சுந்தரியே போற்றி
32. ஓம் கனகமணிக்குன்றே போற்றி
33. ஓம் கற்பின் அரசியே போற்றி
34. ஓம் கருணையூற்றே போற்றி
35. ஓம் கல்விக்கு வித்தே போற்றி
36. ஓம் கனகாம்பிகையே போற்றி
37. ஓம் கதிரொளிச் சுடரே போற்றி
38. ஓம் கற்பனை கடந்த கற்பகமே போற்றி
39. ஓம் காட்சிக் கினியோய் போற்றி
40. ஓம் காலம் வென்ற கற்பகமே போற்றி
41. ஓம் கிளியேந்திய கரத்தோய் போற்றி
42. ஓம் குலச்சிறை காத்தோய் போற்றி
43. ஓம் குற்றம் பொறுக்கும் குணமே போற்றி
44. ஓம் கூடற்கலாப மயிலே போற்றி

Koviloor Digital Library

45. ஓம் கோலப் பசுங்கிளியே போற்றி
46. ஓம் சம்பந்தன் ஞானத்தாயே போற்றி
47. ஓம் சக்தி வடிவே போற்றி
48. ஓம் சங்கம் வளர்த்தாய் போற்றி
49. ஓம் சிவகாம சுந்தரியே போற்றி
50. ஓம் சித்தம் தெளிவிப்பாய் போற்றி
51. ஓம் சிவயோக நாயகியே போற்றி
52. ஓம் சிவானந்த வல்லியே போற்றி
53. ஓம் சிங்கார வல்லியே போற்றி
54. ஓம் செந்தமிழ்த் தாயே போற்றி
55. ஓம் செல்வத்துக் கரசியே போற்றி
56. ஓம் சேனைத்தலைவியே போற்றி
57. ஓம் சொர்க்க நாயகியே போற்றி
58. ஓம் சைவநெறி நிலைக்கச் செய்தோய் போற்றி
59. ஓம் ஞானாம்பிகையே போற்றி
60. ஓம் ஞானப்பூங்கோதையே போற்றி
61. ஓம் தமிழர்குலச் சுடரே போற்றி
62. ஓம் தண்டமிழ்த் தாயே போற்றி
63. ஓம் திருவுடையம்மையே போற்றி
64. ஓம் திசையெல்லாம் புரந்தோய் போற்றி
65. ஓம் திரிபுர சுந்தரியே போற்றி
66. ஓம் திருநிலை நாயகியே போற்றி
67. ஓம் தீந்தமிழ்ச் சுவையே போற்றி
68. ஓம் தெவிட்டாத தெள்ளமுதே போற்றி
69. ஓம் தென்னவன் செல்வியே போற்றி

Koviloor Digital Library

70. ஓம் தேன்மொழியம்மையே போற்றி
71. ஓம் தையல் நாயகியே போற்றி
72. ஓம் நற்கனியின் சுவையே போற்றி
73. ஓம் நற்றவத்தின் கொழுந்தே போற்றி
74. ஓம் நல்ல நாயகியே போற்றி
75. ஓம் நீலாம்பிகையே போற்றி
76. ஓம் நீதிக்கரசியே போற்றி
77. ஓம் பக்தர்தம் திலகமே போற்றி
78. ஓம் பழமறையின் குருத்தே போற்றி
79. ஓம் பரமானந்தப் பெருக்கே போற்றி
80. ஓம் பண்ணமைந்த சொல்லே போற்றி
81. ஓம் பவளவாய்க் கிளியே போற்றி
82. ஓம் பல்லுயிரின் தாயே போற்றி
83. ஓம் பசுபதி நாயகியே போற்றி
84. ஓம் பாகம்பிரியா அம்மையே போற்றி
85. ஓம் பாண்டி மாதேவியின் தேவே போற்றி
86. ஓம் பார்வதி அம்மையே போற்றி
87. ஓம் பிறவிப்பிணி தீர்ப்பாய் போற்றி
88. ஓம் பெரிய நாயகியே போற்றி
89. ஓம் பொன்மயிலம்மையே போற்றி
90. ஓம் பொற்கொடி அன்னையே போற்றி
91. ஓம் மலையத்துவசன் மகளே போற்றி
92. ஓம் மங்கல நாயகியே போற்றி
93. ஓம் மழலைக் கிளியே போற்றி
94. ஓம் மனோன்மணித் தாயே போற்றி

Koviloor Digital Library

95. ஓம் மண்சுமந்தோன் மாணிக்கமே போற்றி
96. ஓம் மாயோன் தங்கையே போற்றி
97. ஓம் மாணிக்க வல்லியே போற்றி
98. ஓம் மீனவர்கோன் மகளேபோற்றி
99. ஓம் மீனாட்சியம்மையே போற்றி
100. ஓம் முழுஞானப் பெருக்கே போற்றி
101. ஓம் முக்கண்சுடர் விருந்தே போற்றி
102. ஓம் யாழ்மொழியம்மையே போற்றி
103. ஓம் வடிவழகம்மையே போற்றி
104. ஓம் வேலனுக்கு வேல்தந்தோய் போற்றி
105. ஓம் வேதநாயகியே போற்றி
106. ஓம் வையகம் வாழ்விப்பாய் போற்றி
107. ஓம் அம்மையே போற்றி போற்றி
108. ஓம் அருள்வாய் அம்மையே போற்றி போற்றி!

Koviloor Digital Library

பொற்கிழிக்கவிஞர் அரு.சோமசுந்தரன் எழுதி உள்ள நூல்கள்

கவிதை:

1. கவியரங்கில் கவிஞர் சோமசுந்தரன்
2. சோமசுந்தரன் கவிதைகள்
3. திருமுறைகள் வீட்டு நூல்
4. ஐரோப்பா (தமிழக அரசின் பரிசு பெற்றது).
5. கவிதை வானில்
6. கவிதை மண்ணில்
7. கவிதை ஆற்றில
8. கவிதைக் கடலில்
9. பாண்டிமாதேவி (பொற்கிழிக் காப்பியம் தமிழக அரசின் பரிசு பெற்றது).
10. அருள் மணியம் (நாடகக் காப்பியம்).
11. திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ்
12. ஸ்ரீகுருதட்சணா மூர்த்தி பிள்ளைத் தமிழ்
13. அன்னை மீனாட்சி அந்தாதி
14. சிறுவர்க்கு விஞ்ஞானம் (குழந்தைப் பாடல்கள்)

கட்டுரை:

15. கட்டுரைக் கற்கண்டு
16. கட்டுரைப் பெட்டகம்
17. கட்டுரைக் கற்பகம்
18. கட்டுரை இலக்கியம்

Koviloor Digital Library

பயணம்

19. இராமேஸ்வரம் காசி நடைப்பயணம்
(தமிழக அரசின் பரிசு பெற்றது).
20. இந்தியா
21. நேபாளம்
22. இலங்கை
23. பிரிட்டன்
24. பிரான்சு
25. ஜெர்மனி
26. சுவிட்சர்லாந்து
27. இத்தாலி
28. பெல்ஜியம்
29. ஹாலந்து
30. ஆஸ்திரியா
31. வாட்டிகன்
32. மலேசியா
33. சிங்கப்பூர்
34. ஹாங்காங்
35. தாய்லாந்து
36. பிலிப்பைன்சு
37. சுற்றுலா.

ஷேக்ஸ்பியர் (மொழி பெயர்ப்பு)

38. இரண்டாம் ரிச்சர்டு
39. ஒதெல்லோ
40. ஹாம்லெட்
41. அந்தோனியும் கிளியோபாட்ராவும்

Koviloor Digital Library

42. மாக்பெத்
43. எண்ணிய எண்ணி பாங்கு
44. வெனிஸ் வியாபாரி
45. கார்காலக் கதை
46. பன்னிரண்டாம் இரவு
47. மன்னன்லியர்
48. புயல்

கதை

49. அழகிய உளவாளி
50. சர்க்கஸ் பேரரசி
51. ஆங்கில அருங்கதைகள்
52. ஒற்றுமைக் கதைகள்
53. விடுதலை வேட்கை

சரித்திரம்

53. சீனப்படையெடுப்பு
54. பாகிஸ்தான் படையெடுப்பு
55. வங்காள தேசப் போர்
56. உலகைக் கவர்ந்த முக்கிய நிகழ்ச்சிகள்

வாழ்க்கை வரலாறு

57. உயர்கல்வி தந்த உத்தமர்கள்
58. பெருந்தொழில் வளர்த்த பெரியோர்
59. நாடுபுகழும் ஜி.டி. நாயுடு
60. வள்ளல் அழகப்பர்
61. மாவீரன் நெப்போலியன்
62. அடியார் அறுபத்து நால்வர்
63. அருசோ நீலா மணிவிழாமலர்.

KOVILOOR LIBRARY
A. Ex............
32236

Koviloor Digital Library

Koviloor Digital Library

"பொற்கிழிக் கவிஞர்" "காசிஸ்ரீ"
அரு. சோமசுந்தரன் (அருசோ) M.A.,B.T

சிறந்த கவிஞர்; 15,000க்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியவர். நூறு நூல்களுக்கு ஆசிரியர். கவிதை, கட்டுரை, இலக்கியத் திறனாய்வு, நாடகம், மொழிபெயர்ப்பு, பயணம், ஆன்மீகம் என்று பலதுறைகளில் வல்லுநர். ஆகவே இவருக்குப் "பல்துறைச் செந்நாப் பாவலர்", "கவிஞர்கோ" என்ற பட்டங்களையும், தங்கப் பதக்கத்தையும் வழங்கித் தவத்திரு குன்றக்குடி அடிகளார் சிறப்பித்தார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் தமிழக அரசின் சார்பில் நடத்தப்பெற்ற பொற்கிழிக் காவியப் போட்டியில் முதல் பரிசுபெற்று, முதற்பொற்கிழியினைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களிடம் இருந்து பெற்றார்.

இராமேஸ்வரத்தில் இருந்து காசிக்குப் பாதயாத்திரையாக நடந்துசென்று இந்த நூற்றாண்டில் மாபெரும் ஆன்மீகச் சாதனை நிகழ்த்திக் காசிவிஸ்வநாதர் கோவிலில் "காசிஸ்ரீ" பட்டம் பெற்றார்.

தமிழக முதல்வர்களான காமராஜ், கலைஞர் மு. கருணாநிதி, எம்.ஜி.ஆர்., வி.என். ஜானகி, கவர்னர் கொரானா மற்றும் சி. சுப்பிரமணியம், நெடுஞ்செழியன் ஆகியோரால் பாராட்டப்பெற்று எல்லா அரசுகளாலும் சிறப்பிக்கப்பெற்றவர்.

இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், பாகவதம், சிலப்பதிகாரம், விஷ்ணுபுராணம், சிவமகாபுராணம், நாரதபுராணம் முதலிய ஆன்மீகச் செல்வங்களைத் தொடர்சொற்பொழிவாக ஆற்றி மக்களை நன்னெறிப்படுத்துகிறார். இவரது பணிகள் எல்லையற்றவை. பரப்பளவு விரிவானது. உலகம் சுற்றிய தமிழர். பல குருபீடங்களின் உத்தம சீடர்.